உ

கடவுள்துணை.

# செய்யுளிலக்கணம்.

## கத்தியரூபம்.

அஷ்டாவதானம்

**பூவை - கலியாணசுந்தரமுதலியாரால்**

இயற்றப்பட்டு,

பிருங்கிமாநகரம்

**இராமசாமிமுதலியாரவர்களால்**

சென்னை:

நிரஞ்சனவிலாசவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1893.

**Registered Copyright.**

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் போதகாசிரியர்

**தசாவதானம்**

## பேறை - ஜெகநாதப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

*பட்டாங்கி லுளவறிஞ ரியாவருமே யெளிதாகப் படித்துப் பாடக்*
*கட்டாய யாப்பின்வகை யனைத்தினையுந் தெளிவாகக் காட்டி மேற்கோள்*
*சுட்டாரச் செய்யுளிலக கணமெனுநூ னவரசமுஞ் சொட்டப் பூவை*
*யட்டாவ தானகவி யாணசுந் தரக்கவிஞ னறைந்திட் டானால்.*

# PREFACE.

At the present day, when books are multiplying without even a shadow of satisfying the well-known Leibnitzian Principle of Sufficient Reason for their coming into existence, a few words of mine by way of preface will not be out of place here. My object in this little Manual of Tamil Prosody is to give a clear and comprehensive explanation of the rules and principles of Tamil Poetic Diction for the use of beginners in this study. The Treatises on Tamil Prosody of ancient date, which are the ground works upon which all later Tamil poetical productions are based, are in the form of *sutras, i e.,* blank or ryhming verses. Manuals of Tamil Prosody of recent date, written in prose, are either too compendious or sadly wanting in right order and classification. Hence, the author intended, that, by paying due attention to order and classification and to clearness and simplicity of style in explanation, he will be enabled to place in the hands of beginners in Tamil Prosody what is usually styled by the ordinary role of book makers, a long-felt want—a real and not imaginary long-felt want. The points of improvement which the author modestly claims for this little book are among many, chiefly the following : (1) a new and intelligible classification of the Tamil Metrical forms, (2) a simpler and more accurate explanation of the Principles of Tamil versification and (3) an explanation of the most difficult form of Tamil Poetic composition வண்ணம் which is for the first time to be found in prose in this little book.

With these words of preface, I leave the book to the judgment of the learned and the learners, with the hope that it will meet with indulgent treatment from my critics. I shall consider myself amply repaid for what little trouble I may have taken in the preparation of this book, if I find that to any the least extent it proves a useful guide in the hands of the students of Tamil Prosody.

MADRAS,
15*th Feb.* 1893.

P. CULLEAUNASUNDROM.

# OPINIONS.

From

RAI BAHADUR P. RANGANATHA MUDR. AVL., M.A.,

*Professor, Presidency College, Madras.*

SIR,

I have perused with pleasure the contents of your செய்யுளிலக்கணம் or Prosody. It seems to me to contain much useful matter. Those who care to enjoy the metrical beauty and harmony of Tamil Poetry will do well to study your Manual.

22—12—92.

---

From

M. SESHAGRI SASTRIAR, ESQ., M.A.,

*Professor, Presidency College, Madras.*

MY DEAR SIR,

Many thanks to you for your Tamil Prosody called செய்யுளிலக்கணம். The treatise is one of best books hitherto published on the subject. The rules are very clear and the examples are well chosen. I am quite sure that the book will be very useful to those who study Tamil poetry and deserves to be in the hand of every Tamil student in colleges and schools.

6-2-93.

---

From

P. SUNDRAM PILLAI, ESQ., M.A.,

*Professor, Maharajah's College, Trevandrum.*

MY DEAR SIR,

As desired by you, I have gone through your neat and concise work on Tamil Prosody called செய்யுள் இலக்கணம். I think you have brought out the main points of this very difficult subject with great clearness and force. The examples you have chosen are simpler and more attractive than those generally used in old text books on the subject. I believe you have rendered by this volume considerable service to students who seek to master this branch of our Tamil Grammar. Your notice of வண்ணம் is surely a desirable addition.

26—12—92.

From

C. W. THAMOTHARAM PILLAI, Esq., B.A., B.L.,

*Late Judge, Chief Court, Pudukota*

Your Cheyyulilakkanam has been well written. Concise as it is, it gives in plain prose all that is required for a student to know in Prosody with sufficient illustrations, so that the average student can learn it in half the time he may have to devote to get through Karikai, the present popular work on the subject.

16—1—93.

From

P. V. RAMASAWMY RAJU, Esq., B.A.,

*Barrister-at-Law, High Court,*
*Madras.*

DEAR SIR,

I am happy to inform you that your "செய்யுளிலக்கணம்" has been carefully perused by me and that I find it a concise and useful exposition of the rules of Tamil Prosody. The chief merit about it seems to me to be this—that it will induce its readers to study the higher works on the subject by the very clear and simple manner in which it explains the principles which are more elaborately discussed in the former. It is a source of extreme gratification to me to see your effort in this direction, as unfortunately works of this kind are growing fewer day by day. Wishing your work every success, &c., &c.

5—2—93.

From

T. VEERABADRA MUDALIAR, Esq., B.A., B.L.,

*Vakeel, High Court of Madras.*

SIR,

I have perused your book Seyyulilakanam with very great pleasure and interest. It is the first complete work on Prosody of its kind that I have seen, embodying in prose, in a lucid and concise form not only the excellent rules of Prosody contained in Karigai with commentary, but also a variety of very valuable information on such allied subjects as Porutham, Mangalachol, Prabhandam, &c.

I have no doubt that the book will be appreciated by many readers of Tamil Poetry who ought to be thankful to you for saving them the trouble of wading through annotated Karigai and Venbapattial which are all, again, out of print now.

15—12—92.

From

T. T. KANAKASUNDARAM PILLAI, Esq., B.A.,

*Educational Clerk, Govt. Secretariat, Madras.*

Dear Sir,

I have perused portions of your book on Tamil Prosody and think it well adapt ed for use in the school-room. To most of the students in our schools and colleges, Tamil Prosody has hitherto been a sealed book, and I am glad to think that your book will obviate all the difficulties in understanding that fourth· part of Tamil Grammar and awaken the interest of all students.

28—12—92.

---

From

T BALASUNDRA MUDALIAR, Esq.,

*Munshi to Tamil Translator to Govt. of Madras.*

Sir,

Many thanks for the copy of செய்யுளிலக்கணம் you have kindly sent me. I need only express the pleasure I felt in going over the excellent quotations from eminent Tamil poets, which very well illustrate some of the otherwise inexplicable points in Tamil Prosody. I have read your Manual with a peculiar interest partly because it appears to be an imitation of one of my most favorite books சிதம்பரம்செய்யுட்கோவை, and partly because it is a work proceeding from an old friend of mine. I feel sanguine that your Manual which displays considerable labour and research on your part cannot but prove useful to those for whom it is intended. Allow me to say that your Manual, the explanatory portions of which, are written in clear and accurate prose deserves to find a place in the hands of every student of Tamil Prosody, as it is sure to save him the laborious task of poring over the pages of காரிகை. I sincerely hope that your Manual will win for you a fitting recognition at the hands of the Tamil reading public, and that you will be an example to many a learned man who allows his knowledge to get rusty, forgetful of the Poet's remark :—

"Who reads
Incessantly, and to his readings brings not
A spirit and genius equal or superior,
Uncertain and unsettled still remains
Deep versed in books and shallow in himself."

29—12—92.

---

From

T. SARAVANAMUTTU PILLAI, Esq., B.A.,

*Librarian, Presidency College, Madras.*

DEAR SIR,

When I began to learn Tamil Prosody I felt very much the want of a book that would have placed before me in brief compass the elementary principles of Tamil Prosody. After I have seen your Manual I feel quite assured that no such want will be felt by students in the future. And, moreover, the examples you have throughout given are in themselves a source of true delight to the students of Tamil Literature.

4—1—93

---

From

N. BALASUBRAMANYA MUDALIAR, Esq., B.A.,

*Late Ag. Mathematics Professor, St Joseph's College, Bangalore.*

SIR,

Kindly accept my best thanks for the copy of your செய்யுளிலக்கணம் you kindly sent me. I find it on careful reading a most excellent Manual of the Principles of Tamil Prosody and the best of its kind I have ever come across. In comparison with those that can be found in any existing treatises on Tamil Prosody, your explanations are real models of lucidity and clearness. Besides, your illustrations are just such as are fitted to exhibit the varied beauties of Tamil Metrical Composition. In my humble opinion, I know of no other book than yours that deserves so well to be in the hands of every student of Tamil Prosody.

With sincere wishes for the success of your Manual, &c., &c.

26—12—92.

---

From

T. RAMAKRISHNA PILLAI, Esq., B.A.,

*Bench Clerk, High Court, Madras.*

MY DEAR SIR,

I have read with very great pleasure your செய்யுளிலக்கணம் and am glad to state that it is good and supplies a want.

10—1—93.

---

உ

கடவுள் துணை.

# செய்யுளிலக்கணம்.

## தெய்வவணக்கம்.

எண்கலிவண்ணப்பா.

குறிப்பு.

தனனாதனந் தனனாதனந் தனனாதனந்
தய்ய தனந்தனனா.

தரணார்பதிப் பொருளியாதெனத் தடுமாறிமிக்
குள்ளமயர்ச்சியுறார்
சதுமாமறைக்கரிதாகியுந்தமமாமனந்
தையமொழித்தருள்சேர்
உரணார் விழுத் தகையாளர் பெற் றுளதாய்நிலைத்
தெவ்வயின்முற்றுறைவாய்
ஒருவா துநித் திய மேன்மையுற் றொளிரோர்முதற்
றெய்வமதைப் புகழ்வாம்
அரணார்துடித் தொனியாலுதித் தழகார்தமிழ்க்
கல்விவளர்ச்சியினால்
அருணாடிதற் கவிபாடுதற் கதியாவனுட்
கொள்ளுநர்கைக்கொளநேர்
திரணார் முழுப் புலவோர் மகிழ்ச் சியின்மேவுறச்
செய்யுளிலக்கணமே
திசையாவுமுற் றவிர்வான்மிகத் தெளிவாமெனச்
சொல்வளனைப்பெறவே.

# செய்யுளிலக்கணம்

## நூல்.

## உறுப்பியல்.

### செய்யுள்.

எழுத்து, அசை, சீர், தளை, ஓசை, அடி, எதுகை, மோனையென்னுமுறுப்புக்களாற் செய்யப்படுவது.

### எழுத்து.

உயிர், குறில், நெடில், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை யென்பனவாம்.

### அசை.

எழுத்தானது தனித்தேனும், இணைந்தேனுநிற்பது. இது நேரசை, நிரையசையென விருவகைப்படும்.

### நேரசை.

குற்றெழுத்துத் தனித்தேனும் ஒற்றடுத்தேனும், நெட்டெழுத்துத் தனித்தேனும் ஒற்றடுத்தேனும் வருவது.

க—குற்றெழுத்துத் தனித்துவந்த நேரசை.
மண—குற்றெழுத்து ஒற்றடுத்துவந்த நேரசை.
தா—நெட்டெழுத்துத் தனித்துவந்த நேரசை.
பால்—நெட்டெழுத்து ஒற்றடுத்துவந்த நேரசை.

### நிரையசை.

குறிலிணைந்தேனும் ஒற்றடுத்தேனும், குறினெடி லிணைந்தேனும் ஒற்றடுத்தேனும் வருவது.

அரி—குறிலிணைந்துவந்த நிரையசை.
மரம்—குறிலிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை.
நிலா—குறினெடி லிணைந்துவந்த நிரையசை.
வரால்—குறினெடி லிணைந்து ஒற்றடுத்துவந்த நிரையசை.

### சீர்.

அசையுடன் அசை சேர்ந்துவருவது. இது இயற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், பொதுச்சீர், அசைச்சீர் என வைந்துவகைப்படும்.

### இயற்சீர்.

இரண்டசைகளாலாக்கப்படுவது. இது ஆசிரிய வுரிச்சீரென்றும் முதற்சீரென்றும் சொல்லப்படும்.

### வாய்பாடு.

நேர் நேர்=தேமா.
நிரைநேர்=புளிமா.
நிரைநிரை=கருவிளம்.
நேர்நிரை=கூவிளம்.

(உ-ம்.) காண்டற் கரிய கடவுளைப் போற்றிட
தேமா புளிமா கருவிளம் கூவிளம்
வேண்டிய யாவும் விளையும்
ஈண்டிய வுலகி லெம்ம னோர்க்கே.

### வெண்சீர்.

இயற்சீர் நான்கினுக்கும் ஒவ்வொன்றிற்குப்பின் காய் என்னு நேரசையைக்கூட்ட மூன்றுஅசைகளாகி வெண்சீர் எனவும், காய்ச்சீரெனவும், இடைச்சீரெனவும் படும்.

### வாய்பாடு.

நேர் நேர் நேர்=தேமாங்காய்
நிரை நேர் நேர்=புளிமாங்காய்.
நிரை நிரை நேர்=கருவிளங்காய்.
நேர் நிரை நேர்=கூவிளங்காய்.

(உ-ம்.) கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
புளிமாங்காய் தேமாங்காய் கூவிளங்காய் தேமா
அவையல்ல நல்ல மரங்கள் - சவைநடுவே
புளிமாங்காய் தேமா புளிமா கருவிளங்காய்
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
தேமாங்காய் கூவிளம் தேயா கருவிளங்காய்
மாட்டா தவனே மரம்.
தேமா புளிமா மலர்.

### வஞ்சிச்சீர்.

இயற்சீர் நான்கினுக்கும் ஒவ்வொன்றக்குப்பின் கனி என்னு நிரையசையைக்கூட்ட மூன்று அசைகளாகி வஞ்சிச்சீர், கனிச்சீர், கடைச்சீரெனவும் வழங்கும்.

### வாய்பாடு.

நேர் நேர் நிரை=தேமாங்கனி.
நிரை நேர் நிரை=புளிமாங்கனி.
நிரைநிரைநிரை=கருவிளங்கனி.
நேர்நிரைநிரை=கூவிளங்கனி.

(உ-ம்.) பூந்தாமரைப் போதலமரத்
தேமாங்கனி கூவிளங்கனி

தேம்புனலிடை மீன்றிரிதரும்
கூவிளங்கனி கூவிளங்கனி
வளவயலிடைக் களவயின்மகிழ்
கருவிளங்கனி கருவிளங்கனி
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
புளிமாங்கனி கருவிளங்கனி.

### பொதுச்சீர்.

இயற்சீர் நான்கினும் ஒவ்வொன்றிற்குப்பின் தண்பூ, நறும்பூ, தண்ணிழல் நறுநிழல் என்று மிரண்டசைகூடி வருவன.

வாய்பாடு,

தேமாந் தண்பூ   தேமாந் தண்ணிழல்.
தேமா நறும்பூ   தேமாநறுநிழல்.
புளிமாந் தண்பூ   புளிமாந் தண்ணிழல்.
புளிமா நறும்பூ   புளிமாநறுநிழல்.
கருவிளந்தண்பூ   கருவிளந்தண்ணிழல்.
கருவிளநறும்பூ   கருவிளநறுநிழல்.
கூவிளந்தண்பூ   கூவிளந்தண்ணிழல்.
கூவிளநறும்பூ   கூவிளநறுநிழல்.

(உ-ம்.) இந்நூலின் செய்யுளியலில் காட்டியுள்ள குறளடி வஞ்சிப்பாவிற் காண்க.

### ஓரசைச்சீர்.

நேரசையும், நிரையசையும், தனித்தனியே சீராகி, நாள் மலர் என்று வழங்குவதுடன், இவற்றுடன் குற்றியலுகரஞ்சேர்ந்து காசு, பிறப்பு எனவும்வரும்இவை வெண்பாவின் கடையில் வழங்கும்.

(உ-ம்.) ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய். = நாள்
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூனுண்பா
னெங்ஙன மாளு மருள். = மலர்.
அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று. = காசு.
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. = பிறப்பு.

### தளை.

நின்றசீரின் ஈற்றசையும், வருஞ்சீரின் முதலசையும் விதிப்படி ஒத்திருப்பதாகப் பார்ப்பது தளையாம்.

| | | |
|---|---|---|
| மா + நேர் = நேரொன்றாசிரியத்தளை<br>விளம் + நிரை = நிரையொன்றாசிரியத்தளை | | அகவலுக்குரியன. |
| மா + நிரை<br>விளம் + நேர் | இயற்சீர்வெண்டளை. | வெண்பாவிற்குரியன. |
| காய் + நேர் = வெண்சீர்வெண்டளை. | | |
| காய் + நிரை = கலித்தளை | | கலிப்பாவுக்குரியது. |
| கனி + நிரை = ஒன்றியவஞ்சித்தளை<br>கனி + நேர் = ஒன்றாதவஞ்சித்தளை | | வஞ்சிப்பாவிற்குரியன. |

## ஓசை.

சீர்களின்புணர்ச்சியால் தோன்றித் தளைகளா லமைந்த செய்யுட்களின் குணமாய் இசைப்பது. இது செப்பலோசை, அகவலோசை, துள்ளலோசை, தூங்கலோசையென நால்வகையாம்.

## செப்பலோசை.

இது ஏந்திசைச்செப்பல், தூங்கிசைச்செப்பல், ஒழுகிசைச் செப்பலென மூவகையாம். இவை வெண்பாவிற் குரியன.

### ஏந்திசைச்செப்பல்.

வெண்சீர் வெண்டளையால் முற்று முடியும் வெண்பா.

(உ-ம்.) யாதானுநாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

### தூங்கிசைச்செப்பல்.

இயற்சீர் வெண்டளையால் முற்றுமுடியும் வெண்பா.

(உ-ம்.) இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

### ஒழுகிசைச்செப்பல்.

இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் விரவி முடியும் வெண்பா.

(உ-ம்.) கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

## அகவலோசை.

இது ஏந்திசையகவல், தூங்கிசையகவல், ஒழுகிசையகவலென மூவகையாம். இவை அகவலுக்குரியன.

### ஏந்திசையகவல்.

நேரொன் றாசிரியத்தளையால் முற்றுமுடிந்த அகவல்.

(உ-ம்.) போது சாந்தம் பொற்ப வேந்தி
யாதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வோரே.

### தூங்கிசையகவல்.

நிரையொன்றாசிரியத்தளையால் முற்று முடிந்த அகவல்.

(உ-ம்.) அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வாமனைப்
பணிபவர் பவநெறி பரிசறுப் பவரே.

### ஒழுகிசையகவல்.

நேரொன் றாசிரியத்தளையும் நிரையொன் றாசிரியத்தளையும் விரவி முடியும் அகவல்.

(உ-ம்.) தானே முக்தி தருதவன் சிவனவ
னடியின் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே.

## துள்ளலோசை.

இது ஏந்திசைத்துள்ளல், பிரிந்திசைத் துள்ளல், அகவற்றுள்ளல் என மூவகையாம். இவை கலிப்பாவினுக் குரியன.

### ஏந்திசைத்துள்ளல்.

கலித்தளையால் முற்று முடிந்த கலிப்பா.

(உ-ம்.) திருவளைய கருநெடுங்கட் சிலைநுதலார் மயல்வலையி
விருநிலககண் விழுந்துழலு மெளியவனை யெடுத்தன்பிற்
பொருவரிய நினதடியார் புகழுரைத்துத் தினமகக்கட்
பாவவருள் புரிவாய்கொல் பசுபதியெம் பெருமானே.

### பிரிந்திசைத்துள்ளல்.

கலித்தளையும், வெண்சீர் வெண்டளையும் விரவிமுடியுங் கலிப்பா.

(உ-ம்.) சொரிந்திட்ட மலர்ப்பொழிலுட் சூழ்ந்திட்ட வாவியெல்லா
நெரிந்திட்ட மணங்கமழு நிறைவொற்றி யூர்நாட்டில்
விரிந்திட்ட பெருங்கடலே மேய்வலையே கம்புள்ளே
பிரிந்திட்ட வென்றலைவன் பெயர்ந்ததிசை பேசுவீரோ.

### அகவற்றுள்ளல்.

கலித்தளையும், வெண்சீர் வெண்டளையும், பிறதளைகளும் விரவி வருங் கலிப்பா.

(உ-ம்.) நேரலர் போரேறே நெடுந்தார் கோமானே
யாரவனை யார்யா வடியே னுயிர்க்குயிரே
காரிருளில் யான்புலம்பக் கானகத்தில் விட்டகன்று
சாரலையா யின்றுயிர்துபோகின் றண்ணளியே.

---

## தூங்கலோசை.

---

இது ஏந்திசைத்தூங்கல், பிரிந்திசைத்தூங்கல், அகவற்றூங்கலென மூவகையாம். இவை வஞ்சிப்பாவிற் குரியன.

### ஏந்திசைத்தூங்கல்.

ஒன்றிய வஞ்சித்தளையால் முற்றுமுடியும் வஞ்சிப்பா.

(உ-ம்.) வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளினை:—

### பிரிந்திசைத்தூங்கல்.

ஒன்றாதவஞ்சித்தளையால் முற்றுமுடிந்த வஞ்சிப்பா.

(உ-ம்.) வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தரு:—

### அகவற்றூங்கல்.

ஒன்றிய வஞ்சித்தளையும், ஒன்றாத வஞ்சித்தளையும் விரவிவரும் வஞ்சிப்பா.

(உ-ம்.) பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரு
வளவயலிடை களவையின்பகிழ்.

அடி.

சீர்களின் தொடர்ச்சியாகும் இருசீரால் வருவது குறளடி முச்சீரால்வருவது சிந்தடி நாற்சீரால்வருவது அளவடி, ஐந்து சீரால்வருவது நெடிலடி ஐந்து சீரில் மிகுந்து எனைத்துச் சீராலும் வருவது கழிநெடிலடியாம்.

குறளடி.

(உ-ம்.) மனைதீர்த்து நாயேன்
சினைதீர்த்த லானே
னனைதீர்த்த மாடே
வினைதீர்த்த தேவே.

சிந்தடி.

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொடு கொன்பெறார்
சுரரு லோகமு மின்புறார்
அருணை நாயக ரன்பறார்.

அளவடி.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

நெடிலடி.

முன்னநின் னன்னை முலையூட்டி மையிட்டு மூக்குச்சிந்தி
கன்னமுங் கிள்ளிய நாளல்லவேயென்னைக் காப்பதற்கே
அன்னமு மஞ்ஞையும் போலிரு பெண்கொண்ட வாண்பிள்ளைநீ
இன்னமுஞ் சின்னவன் றானோ செந்தூரி லிருப்பவனே.

கழிநெடிலடி.

கற்பூரப்பாத்திகட்டிக் கத்தூரியெருப்போட்டுக் கமழ்நீர்பாச்சிப், பொற்பூரவுள்ளியினை விதைத்தாலு மதின்குணத்தைப் பொருந்தக்காட்டும், சொற்பேதை யருங்கறிவிங் கினிதாக வருமெனவே சொல்லினாலு, நற்போதம் வாராதாங் கவர்குணமே மேலாக நடக்குந்தானே.

இதனின் மிக்க சீர்க்கழிநெடிலடிகள் இந்நூல் செய்யுளியலிற் காண்க.

## எதுகை.

அடிகளின் முதலெழுத்துக்கள் மாத்திரை யளவாயொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒத்துவருவது.

(உ-ம்.) அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

இதில் அக என்பதற்குப் பக என்பது எதுகையாம்.

சிறுபான்மை வருக்கவெதுகை, நெட்டெழுத்தெதுகை, இனவெழுத்தெதுகை, ஆசெதுகையெனவும் வரப்பெறும்.

### வல்லினவருக்கவெதுகை.

(உ-ம்.) தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

### மெல்லினவருக்கவெதுகை.

(உ-ம்.) அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்று நாடாச் சிறப்பு.

### இடையினவருக்கவெதுகை.

(உ-ம்.) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

### நெடிலெதுகை.

(உ-ம்.) ஆவாவென்றே யஞ்சினராழ்ந்தா ரொருசாரார்
கூகூவென்றே கூவினர்கொண்டா ரொருசாரார்.

### இனவெதுகை.

(உ-ம்.) அறத்தா றிதுவென வேண்டா சிவிகைப்
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

### ஆசெதுகை.

ய்-ர்-ல்-ழ்-என்னு நான்கு மெய்களுள் யாதானு மொன்று எதுகைக்கிடையில் வருவது.

(உ-ம்.) காய்மாண்ட தெங்கின் பழம்விழக் கமுகினெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைக்கீறிவருக்கையொழிய:—
மாக்கொடி யானையு மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகை:—
ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் பால்போல்:—
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று.

மற்றுஞ்சில வெதுகைகளுளவாயினும் அத் துணைச்சிறப்பன்று-சொன்ன வற்றுள்ளும் இரண்டாமெழுத்து ஒத்துவரும் எதுகையே மிகச்சிறப்பு.

## மோனை.

முதற்சீர் முதலெழுத்துடன் பின்வருஞ்சீர்களில் ஒன்றிலேனும் பலவற்றிலேனு முதலெழுத்தொன்றிவருவது.

உயிரினுள் அ-ஆ-ஐ-ஔ-இவை தம்முளினமாம்.
இ-ஈ-எ-ஏ-இவை தம்முளினமாம்.
உ-ஊ-ஒ-ஓ-இவைதம்முளினமாம்.

இவையேறிய உயிர்மெய்களுக்கு மிவ்வாறேகொள்க.

ஒற்றினுள் ச-த-இவை தம்முளினமாம்.
ஞ-ந-இவை தம்முளினமாம்.
ம-வ-இவை தம்முளினமாம்.

மற்றையவெழுத்துக்களுக்கு அவ்வவ் வெழுத்துக்களே யினமாம். இம் மோனை யெழுவகையாம் வருமாறு.

### பொழிப்புமோனை.

அளவடிச்செய்யுளில் முதற்சீர்க்கண்ணு மூன்றாஞ்சீர்க்கண்ணு மோனை வருவது.

(உ-ம்.) அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீரடி:—

### இணைமோனை.

முதலிருசீர்க்கண்ணு மோனைவருவது.

(உ-ம்.) அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி:—

### ஒரூஉமோனை.

முதற்சீர்க்கண்ணும் இறுதிச்சீர்க்கண்ணுமோனைவருவது.

(உ-ம்.) அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி:—

### கூழைமோனை.

முதல்மூன்று சீர்க்கண்ணு மோனைவரத்தொடுப்பது.

(உ-ம்.) அகன்ற வல்கு லந்துண் மருங்குல்:—

### மேற்கதுவாய்மோனை.

இரண்டாஞ்சீரன்றி மற்றையசீர்களில் மோனைவருவது.

(உ-ம்.) அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்:—

### கீழ்க்கதுவாய்மோனை.

மூன்றாஞ்சீரன்றி மற்றையசீர்களில் மோனைவருவது.

(உ-ம்.) அவிர்மதி யனைய திருநுத லரிவை:—

### முற்றுமோனை.

எல்லாச்சீர்க்கண்ணு மோனைவருவது.

(உ-ம்.) அயில்வே லனுக்கி யம்பலந் தமர்த்த:—

வேறு சில் மோனையுளவேனு மத்துணைச் சிறப்பன்று. அன்றியும் இணைமோனை, இணையியைபு, இணையெதுகை, இணைமுரண், இணையளபெடை முதலிய இக்காலத்து மிக வருகி வழங்கலால் இவண் விரித்திடாது இந்நூலின் ஒழிபியலிற் காட்டப்பட் டிருக்கிறன.

கடவுள்துணை.

# செய்யுளியல்.

## வெண்பா.

ஈற்றடி முச்சீராய் மற்றையவடி நாற்சீராய் காய்ச்சீரும், இயற்சீ
ரும் விரவி, இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையுங்கொண்
டு, இரண்டடிக்குக் குறையாமல் செப்பலோசை யுற்று, ஓரசைச்சீர்கள்
நான்கிலொன்றை ஈற்றில்பெற்று முடிவது.

இது குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசை
வெண்பா, சவலைவெண்பா, பஃறொடைவெண்பா, * கலிவெண்பா வெனவெ
ழுவகையாம்.

### குறள்வெண்பா.

இரண்டேயடியாய் முதலடிநாற்சீராய் இரண்டாமடிமுச்சீராய்வருவது

(உ-ம்.) அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து.

### சிந்தியல்வெண்பா.

இதுநேரிசைச் சிந்தியல்வெண்பாவென்றும், இன்னிசைச் சிந்தியல்வெண்
பாவென்று மிருவகையாம்.

### நேரிசைச்சிந்தியல்வெண்பா.

மூன்றடியாய் இரண்டாமடி யிறுதிச்சீர் தனிச்சொல் பெற்றுவருவது.

(உ-ம்.) கங்கைக்குக் கண்மலர் சாத்தக் கருங்குவளை
செங்குவளை பூத்தாள் செயலென்னே - யெங்கோமான்
பங்குற்றுந் தீராப் பசப்பு.

---

* கலிவெண்பாவை வெண்பாவகையிற் சேர்த்துச் செப்பியதற்குக் கா
ணம் இந்நூலின் ஒழிபியலிற்காண்க.

### இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

*தனிச்சீர் பெறுதுவருவது.*

(உ-ம்.) போற்றுமின் போற்றுமின் போற்றுமின் போற்றுமின்
கூற்றங் குமைக்க வருமுன் னமரங்காள்
ஏற்றுவந்தான் பொற்று ளிணை.

### நேரிசைவெண்பா.

*நான்கடியாய் இரண்டாமடி இறுதிச்சீர் தனிச்சொல்லாய் முன்னிரண்டடி ஒரொதுகையும், பின்னிரண்டடி மற்றுமொதுகையுமாகவரும். முதலிரண்டடியிலுள்ள வெதுகை தனிச்சீரிலும் பொருந்தவேண்டும்.*

(உ-ம்.) வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலரா
ளோக்குண்டா மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

நான்கடியு மொரோ யெதுகைபெற்று வரினும்வரும்.

### இன்னிசைவெண்பா.

இரண்டாமடியி னிறுதிச்சீர் தனிச்சொலின்றி வருவது.

(உ-ம்.) துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

முன்னிரண்டடி யோரொதுகையாயும் பின்னிரண்டடி யோரொதுகையாயும் வரும்.

மூன்றுமடியில் தனிச்சீர்பெற்றும், அடிகடோறுந் தனிச்சீர்பெற்றும் வரும்.

(உ-ம்.) காதன் மகளிர் கலக்கக் கலக்குண்டு
பேதுற்றார் நெஞ்சம் பிழைத்தகன்றார் நன்னெஞ்சம்
போதம் படரும் புலியூரே - தாதுண்டு
வண்டுறங்கு பூஞ்சடையோன் வைப்பு.

மழையின்றி மாநிலத்தார்க்கில்லை - மழையுந்
தவமிலா ரில்வழி யில்லைத் - தவமும்
அரசிலா ரில்வழி யில்லை - யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

### கலிவெண்பா.

இரண்டு குறட்பாப்போன்று நாலடியு மோரெதுகையைப் பெற்று வருவது.

(உ-ம்.) வேலங்கைக் கொண்டுசென்னை வீறுபெற நின்றோனே
காலங் கடந்த கதியளிப்பான்
ஞாலங் கருதிடினு நல்குவா னென்கைமறை
மூலங் கழறு மொழி.

### பஃறொடைவெண்பா.

நான்கடியின் மிகுந்து ஏழடி யிறுதியாக நிரம்பி எதுகை பொருந்தியும் பொருந்தாமலும் வரும்.

(உ-ம்.) வானே நிலனே கனலே மறிபுனலே
ஊனே யவ்வூனி லுயிரே யுயிர்த்துணையே
ஆனேறு மேறே யரசே யருட்கடலே
தேனே யமுதே யளியேங்கள் செல்வமே
யானே புலனு நலனு மிலனன்றே
ஆனாலு மென்போன்மற் றார்பெற்றா ரம்பலத்துள்
மாநாடகங்காணும் வாழ்வு.

### கலிவெண்பா.

நேரிசை வெண்பாவே போன்று எண்ணிறந்த வடிகளை யுடைத்தாய்த் தனிச்சொற் பெற்றுவருவது.

(உ-ம்.) சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா - வடர்ச்சிய

கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி - மேலோர்நா

ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிலே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் - கன்னை

யடற்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா - னெனயானுந்

தன்னை யறியாது சென்றேமற் றென்னை
வளைமுன் கைபற்றி நலியாத் - தெருமந்திட்

டன்று யிவனொருவன் செய்ந்ததுகா ணென்றேனுக்
கன்னை யலறிப் படர்தரத் - தன்னையா

னுண்ணுநீர் விக்கினா னென்றேனா லன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் - றென்னைக்

கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

---

## வெண்பாவினம்.

வெண்டாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம் என மூவகையாம். வெண்டாழிசையானது குறட்டாழிசை, வெண்டாழிசை யென விருவகை யாம், வெண்டுறையானது குறள் வெண்செந்துறை வெண்டுறையென விரு வகையாம்.

### * குறட்டாழிசை.

இரண்டடியாய் நாற்சீரின்மிக்கு எத்துணைச்சீரானும் அமைந்து முதலடி யளவிற்கு ஈற்றடி ஒருசீரேனும் சில சீரேனும் குறைந்து செப்பலோசை கெட் டுவருவது.

(உ-ம்.) கம்பைமாநதியின் கரைச்சிறுகன்னிபாரா மூலைத்தழும்பணி
உம்பர்கோன்விடையோன் றுலகேழுமுண்டதுவே.

இரண்டடியாய்த் தம்முள்ளளவொத்துச்செந்துறைச் சிதைவும் குறட்டா ழிசையாம்.

(உ-ம்.) முன்புலகின்ற முகிண்முலைக் கன்னியோ
டின்புறும் யோகி யெழுபுவிக் காசே.

குறட்பாவிற்குரிய தளைகெட்டு ஓசை சிதைந்து வரினும் குறட்டாழிசை யாம்.

(உ-ம்.) பின்றாழ் நறுங்கூந்தற் பிடிதழீஇ மால்யானைக்
கன்றீனு முக்கட் களிறு.

---

* தாழிசைக்குறளெனினுமாம்.

## ※ வெண்டாழிசை.

மூன்றடியாய் முதலிரண்டடியும் நன்னான்கு சீராய் ஈற்றடி முச்சீராய்ச் சிந்தியல்வெண்பா போன்று தளைகெட்டுவருவது.

(உ-ம்.) கனக மார்க வின்செய் மன்றில்
அனக நாட கற்கெம் மன்னை
மனைவி தாய்தந்தை மகள்.

சிந்தியல்வெண்பா மூன்று ஒருபொருண்மே லடுக்கிவரினும் வெண்டாழிசையாம்.

(உ-ம்.) அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
கொம்பே றுடையாள் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வம்பே யிறந்து விடல்.

வாணேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
நீணாகம் பூண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வீணே யிறந்து விடல்.

கோளாருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே
ஆளாகி யாண்டான் கழலிறைஞ்சா தென்கொலியாம்
வாளா விறந்து விடல்.

## * செந்துறை.

அளவொத்த அளவடியிரண்டாய் விழுமியபொருளும் ஒழுகிய வோசையுமாய் வருவது.

(உ-ம்.) கொன்னற வேந்தன் செல்வ னடியிணை
யென்று மேத்தித் தொழுவோ மியாமே.

## வெண்டுறை

மூன்றடிமுத லேழடியீறாகப் பின்புநின்ற சிலவடிகளில் சிலசீர் குறைந்துவரும். இவற்றுளெல்லாவடியு மோரோசையாயும் பின்பிற் சிலவடிகண் மற்றோ ரோசையாயும் வருதலுமுண்டு.

---

※ வெள்ளொத்தாழிசை யெனினுமாம்.

* செந்துறைவெள்ளை அல்லது குறள்வெண்செந்துறை யெனினுமாம்.

முதலடியறுசீராய் ஏனையடி நாற்சீராய்வந்த மூன்றடிவெண்டுறை.

(உ-ம்) பாசிருக்குந்தமிழ்மூவர் பாட்டிருக்குந் திருமன்றிற் பரசொன்
அரசிருக்கும் பெருமானார்க்காட்செய்யாரென்செய்வார் [றேந்தி
முரசிருக்கும்படை நமனார் முன்னாகுமந்நாளே.

முதலடியிரண்டும் அறுசீராய் ஓரோசைத்தாய் ஏனையடிநாற்சீராய் வந்த வேறோரோசைத்தாய் ஏழடிவேற்றொலி வெண்டுறை.

[தேன்பில்கி
(உ-ம்) கூற்றிருக்குமுடலாழிக் குரிசின்முதலோரிறைஞ்சக் கொழுந்
ஊற்றிருக்குந்தில்லைவனத் தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத்
வண்டுபாடச்சுடர் மகுடமாடப்பிறைத் [தொருதாளூன்றி
துண்டமாடப்புலித் தோலுமாடப்பகி
ரண்டமாடக்குலந் தகிலமாடக்கருங்
கொண்டலோடுங்குழற் கோதையோடுங்கறைக்
கண்டராடுந்திறங் காண்மினோகாண்மினோ.

* வெளிவிருத்தம்.

மூன்றடியாலேனும், நான்கடியாலேனு முற்றுப்பெற்று அடிதோறு மிறுதியில் ஓரேதன்மையான சொல்லைப்பெற்று வருவது.

மூன்றடியால்வருவது.

(உ-ம்) அங்கட்கமலத் தலர்க்கமல மேயீரு நீரேபோலும்
வெங்கட்சுடிகை விடவரவின் மேயீருநீரேபோலும்
திங்கட்சடையீருந் தில்லைவனத்துள்ளீருநீரேபோலும்.

நான்கடியால்வருவது.

(உ-ம்) வெஞ்சமன்வஞ்ச வேலொடெதிர்ந்தானமரங்காள்
அஞ்சலெனுஞ்சொல்லார் சொலவல்லார்நமரங்காள்
மஞ்சிவரிஞ்சி மன்றமிறைஞ்சீர்நமரங்காள்
நஞ்சமயின்றார் நல்குவர்மாதோநமரங்காள்.

* வெளிவிருத்தம், வெண்பாவிருத்தம், வெள்ளைவிருத்தம் என்பன ஒரு பொருட்கிளவி.

## ஆசிரியப்பா.

அடியொன்றுக்குநான்குசீராய் இயற்சீர்ப்பயின்றும், வெண்சீர்விரவியும், மூன்றடிக்குக்குறையாமல் பலவடிகளால் அகவலோசையுற்று இறுதியில் * ஏ யென்னுமசையுடன் முடிவது.

இவ்வாசிரியப்பா நேரிசையாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, அடிமறிமண்டிலவாசிரியப்பா வெனநான்குவகையாம்.

### நேரிசையாசிரியப்பா.

எல்லாவடிகளுநாற்சீராய் ஈற்றயலடி முச்சீராய்முடிவது.

(உ-ம்) செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

### நிலைமண்டிலவாசிரியப்பா.

எல்லாவடிகளுநான்கு சீராலேயே முடிவது.

(உ-ம்) கடம்பணி தொடையன் மிடைந்த தடந்தோள்
வன்றிற லெஃக மேந்திய வலவன்
கொன்றையன் சடிலத் தாசான் மன்ற
பற்றினர் பையுட் பற்றீ தென்னே.

### இணைக்குறளாசிரியப்பா.

முதலடியும் கடையடியும் நான்குசீராய் இடையில் வருமடிகள் இரண்டு சீராயும், மூன்றுசீராயும்வருவது.

(உ-ம்) தண்ணென் கடுக்கை கண்ணீர் கலுழ்தர
வெண்மதி கண்ணி சூடும்
கண்ணுதற் கடவுள்
புண்ணியப் பொதுவி லாடும்பூங்கழ லிறைஞ்சுதும்
விண்மிசை போகிய வீடுபெறற் பொருட்டே.

---

* ஆ-ஈ-ஏ-ஓ-என்னே என்கிறஅசைகளையும் இறுதியிற்பெறும். ஆயினும் நிலைமண்டிலவாசிரியம்-என்னே-என்னும் இறுதியையும், மற்றையவை-ஏ-என்னும் இறுதியையும்பெறுதல் சிறப்பு.

### அடிமறிமண்டிலவாசிரியப்பா.

எல்லாவடிகளையு முதலாகவும், ஈறாகவும், நடுவாகவு மாறிமாறி வைத்துப் படிக்கினும் பொருள்கெடாதுவருவது.

(உ-ம்) தீர்த்த மென்பது சிவகங் கையே
யேத்த ருந்தல மெழிற்புலி யூரே
மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே.

## ஆசிரியப்பாவினம்.

ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்த மென மூன்றும்.

### ஆசிரியத்தாழிசை.

மூன்றே யடியாய் அளவொத்துத் தனித்தாயினும், ஒருபொருண்மேன் மூன்றடுக்கியாயினும் வருவது.

(உ-ம்) என்றுஞ் சென்று மிமைவரு முச்சியா
ரின்றுந் துன்று மெழின்மகி ழொற்றியூ
ரொன்றும் பொன்று முயிரடர் மிச்சையே.

மூன்றடுக்கிவருவது.

(உ-ம்) சிற்றம்பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
கற்றைச்சடைக்கு முடிக்குஞ்சுடர்த்திங்கள்
மற்றப் புனன்மங்கைவாணுதலை யொக்குமால்.

பேரம்பலத்து நடிக்குஞ்சிவபெருமான்
வார்செஞ்சடைக்கு முடிக்குஞ்சுடர்த்திங்கள்
நீர்மங்கைகொங்கைக்கு நித்திலக்கச்சொக்குமால்.

பொன்னம்பலத்து நடிக்குஞ் சிவபெருமான்
மின்னுஞ் சடைக்கு முடிக்குஞ் சுடர்த்திங்கள்
அந்நங்கை செங்கைக் கணிவளையு மொக்குமால்.

### ஆசியத்துறை.

எனைத்துச் சீரானும் வருமடி நான்குடையதாய் ஈற்றயலடிகுறைந்தேனும் முதலடியு மூன்றாமடியுங் குறைந்தேனும் வருவது. வருமிடத்து இடைமடங்கியு மடங்காதும் வரும்.

(உ-ம்.)நாகம்பொதிசடைமேனுண்மதியும்வாண்மதிபோனங்கைகங்குல்
மேகஞ்செய் கூந்தன்மிலைச்சுந்தலைக்கலனும் விளங்குந்தோற்றம்

ஆகம் பகுந்தளித்த வந்நாளி லம்பலத்தான்
மாகம்பதியு மதியும் பகுந்தளித்த வண்ணம்போலும்.

இடைமடக்காய்வருவது.

உ-ம்.) மாயிரு ஞாலத்து மன்னுயிர்கள் கண்களிப்பமன்றுளாடு
நாயகன் கண்டங் கறுத்தன்றே பொன்னுலகை நல்கிற்றம்மா
நாயகன் கண்டங் கறுத்தே லந்நாட்டமரர் (போலும்.
சேயிழைமாதருக்குச்செங்கைகளுநங்கொங்கைகளுஞ்சிவக்கும்

---

ஆசிரியவிருத்தம்.

கழிநெடிலடி நான்கு தம்முள் ளளவொத்து வருவது.

அறுசீர் விருத்தம்.

மண்டலத்தின் மிசையொருவன் செய்தவித்தை யகோவெனவும் வாரனுதி, யண்டமவையடுக்கடுக்காயந்தரத்தினிறுத்துமவதானம்போல,வெண்டருநல்லகிலாண்டகோடியைத்”ன்னருள்வெளியிலிலக வைத்துக்கொண்டுநின்றவற்புதத்தையெவராலுநிச்சயிக்கக்கூடாவொன்றை

இது முதல் நாற்சீர் காய்ச்சீர்களாகவும் கடை இருசீர் இயற்சீராகவு முடிந்தது.

வேறு.

நேற்றுளா ரின்று மாளா நின்றன ரதனைக் கண்டும்
போற்றிலே னின்னை யந்தோ போக்கினேன் வீணே கால
மாற்றிலேன் கண்டா னந்த வண்ணலே யளவில் மாயைச்
சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறிய னேனே.

இது அறுசீரும் இயற்சீராலேயே முடிந்தது.

வேறு.

சொல்லற் கரிய பரம்பொருளே சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலிலெனை விட்டெங் கொளித்தா யாகெட்டேன்
கல்லிற் பசிய நாருரித்துக் கடுகிற் பெரிய கடலடைக்கு
மல்லிற் கரிய வந்தகனுக் காளாக் கினையோ வறியேனே.

இது மூன்றுஞ்சீரும்ஆறுஞ்சீரும் காய்ச்சீராய்மற்றையஇயற்சீரால்முடிந்தது.

வேறு.

கண்டு நின்றனை யைம்புல னேமகிழ் காமக் கைதவத்தில்
தொண்டு செய்கிலே யொற்றி யூர்வளர் தொன்மை யடியவர்பால்

விண்டு பேசிலை நால்வ ரின்புகழ் வியந்து நாடோறுங்
கொண்டு போதா வென்ன வோதடை கொடிய கூற்றுவற்கே.

இது முதலைந்துசீர் இயற்சீராயும் கடையொருசீர் காய்ச்சீராயு முடிந்தது.

---

ஏழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆரண மார்க்கத் தாகம வாசி யற்புத மாய்நடந் தருளுங்
காரண முணர்த்துங் கையுநின் மெய்யுங் கண்கண்மூன் றுடைய வென்
பூரணவறிவிற்கண்டிலமதனாற்போற்றியிப்புந்தியோடிருந்து[கண்ணே
தாரணி யுள்ள மட்டுமே வணங்கத் தமியனேன் வேண்டிடத் தருமே.

இது முற்று மியற் சீராலேயே முடிந்தது.

வேறு.

அல்லையொத்த சூர்மேல் வில்லெடுத்த கூர்வே லையனுக்கு வாழ்
தாதையுமாவார்,வல்லியொத்தபூணார்நயனுக்குமாலாம் வள்ளனுக்கு
வாழ்வாகியமூதூர்,செல்லுழக்கிவேள்போர் வில்லொடித்துமீனார் செய்
யழித்து வாடா வயல்வானை, புல்லொதுக்கிலேபோய் நெல்வரப்பி
லேசேர் புள்ளிருக்கு வேளூர்நகர்தானே.

இது காய்ச்சீரும் இயற்சீரு மாறிமாறி வந்துமுடிந்தது.

---

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
யாரமிர்தே யென்கண்ணே யரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவியாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங் கேளே.

இது அரையடிக்கு இரண்டுகாய்ச்சீரும் இரண்டு இயற்சீருமா யிரட்டித்து வருவது.

வேறு.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல்போலப்
புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவட்டுத்தொன் மரத்திடுக்கிற் காலுழைந்துக் கொண்டே
யாப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கைப் போல
வகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீர் நீரே.

இது அரையடிக்கு முதல் மூன்றுசீர் காய்ச்சீராயும், கடைச்சீர் மாச்சீராயு மிரட்டித்துவருவது.

வேறு.

வற்கலை கொண்டும் வலியவந் தண்டும்
வனசரு குண்டும் வளியது தின்றுங்
கற்களி லென்றுங் கனலிடை நின்றுங்
கனபசி விண்டுங் கதிபெற விலையா
னற்கலை தேர்ந்த வொற்றியை யார்ந்து
நவமணி வேய்ந்து மணிவிளை வாய்ந்து
பொற்பணி சார்ந்து மகவுடன்வாழ்ந்தும்
புகழ்தரு சிவகதி நிகழ்வது நிசமே.

இது எல்லாச்சீரும் இயற்சீராலேயே முடிந்தது.

ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வளங்கு லாவரு மணங்க ளூர்விழி மயக்கி லேமுலை
முயக்கி லேவிழு மாந்தர்காள்
களங்கு லாமுட லிறந்து போயிடு காடுசேர்முனம்
வீடு சேர்வகை கேண்மினோ
துளங்கு நீள்கழ லறங்க வாடல்செய் சோதி யானணி
பூதியானுமை பாதியான்
விளங்குசேவடி யுளங்கொளீரொமன் விடுத்த பாசமு
மடுத்த பாசமு விலக்குமே.

### பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கைத்தலத் தழற்க ணிச்சி வைத்திடப் புறத்தொருத்தி
  கட்கடைப் படைக்கி ளைத்த திறலோரா
முத்தலைப் படைக்க ரதநெ மத்தர்சிற் சபைக்கு ணிற்கு
  முக்கணைக் கருக்கொ ருத்தர் மொழியாரோ
நித்திலத் திளைப்ப தித்த கச்சறுத் தடிக்க ணத்து
  நிற்கு மற்புதத் தனத்தி னிடையேவே
ளத்திரத் தினிற்றொ டுத்து விட்டநெட் டயிற்க ணித்தி
  லக்கணுற் றிடச்செய் விக்கு மதுதானே.

பதின்சீரின் மிக்குவரும் ஆசிரியவிருத்தங்கள் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களிற்காண்க.

---

## கலிப்பா.

நேரீற்று இயற்சீரும், நிரைநடுவாகிய கனிச்சீரும் பெறாது, நிரைமுதலாகிய வெண்பாச்சீர்மிகுந்துதன்தளையும்பிறதளையும்தழுவி * தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பு முடைத்தாய் வருவது.

இது ஒத்தாழிசைக்கலிப்பா, வெண்கலிப்பா, கொச்சகக்கலிப்பா, கட்டளைக்கலிப்பா வெனநான்காம்.

ஒத்தாழிசைக்கலிப்பாவானது வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, நேரசையொத்தாழிசைக் கலிப்பா வெனமூன்றாம்.

---

* தரவுஎன்றபொருண்மையென்னவெனின் முகத்துத்தரப்படுவதென்ப. தாழிசையென்ற தென்னையெனின் பெரும்பாலுந் தாழப்பட்ட ஓசையுற்றவாகலினென்பது.

அராகமென்பதுஅறுதுகடுகிச்சேரல், மாத்திரைநீண்டும் துணிந்தும்வாராது குற்றெழுத்துப் பயின்றுவந்து நடைபெறுவது.

அம்போதரங்கம்-அம்போதி=கடல், தரங்கம்=நீர்த்திரை, நாற்சீரடி முச்சீரடி இருசீரடிஆகியஅசையடிகள்கடலின்கண் அலைகள் கரைச்சாரசாரமுறைமுறையே சுருங்கிவருகின்றதன்மைபோல, தனிச்சொல்லைச்சாரசாரமுறையாகக்குறைந்துவருவது.

சுரிதகமென்பது நீர்ச்சுழிபோல நின்று சுரிந்து இறுவது.

### வண்ணகவொத்தாழிசைக்கலிப்பா.

*தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய ஆறுறுப்புக்களும் பெற்று வருவது.*

தரவு.

(உ-ம்.) தொல்லுலகம் படிசுடிகைச் சுடர்மணிவி ளக்கேந்தும்
பல்பொறிய படவரவு மடிபுலியும் பணிசெய்ய
அந்தரதுந் துபிமுழங்க வமரர்மலர் மழைசிந்த
இந்திரனு மலரவனுங் கரியவனு மேத்தெடுப்பச்
சூடகத்த ளிர்ச்செங்கைத் துணைவிதுணைக் கண்களிப்ப
ஆடகத்தி ருமன்றத் தனவரத நடஞ்செய்வோய்.

தாழிசை.

முன்மலையுங் கொலைமடங்க லீருரியு மும்மதத்த
வன்மலையுங் கடமலையின் முடையுடலின் வன்றோலும்
பொன்மலையின் வெண்முகிலுங் கருமுகிலும் போர்த்தென்ன
வின்மலையும் புயமலையின் புறமலைய விசித்தனையே.

கடனாக மெட்டும்விடங் காலுக மோரெட்டுந்
தடனாக மோரெட்டுந் தரித்துளபூந் துகிலொன்றும்
உடனாக வடல்புரியுங் கொடுவரியி னுடைப்பொன்றும்
அடலாக வரவல்குற் கணிகலையா யசைத்தனையே.

வருநீலப் புயன்மலர மலரிதழிக் கண்ணியையும்
அருநீல முயற்களங்க மகன்றமதிக் கண்ணியையும்
கருநீலக் கண்ணியுமை செங்கைவரு கங்கையெனும்
திருநீலக் கண்ணியையுஞ் செஞ்சடைமேற் செறித்தனையே.

அராகம்.

கறைவிட முகவெரி கனல்விழி யொடுமிளிர்
பிறையெயி றொடுமுடல் பெறுபக டொடுமடல்
எறும்வலி யொடுமுரு மிடியென வருமொரு
மறலிய துயிர்கொள மலர்தரு கழலினை.

உலகமொ டுயிர்களு முலைதர வல்வரும்
மலர்மகள் கொழுநனு மகபதி முதலிய
புலவரு மடிகளொர் புகலென முறையிட
அலைகடல் விடமுண மமுதுசெய் தருளினை.

விசையிலெம் பிறைவியும் வெருவர விரசிந
அசலம தசைதர வடல்புரி தசமுக
நிசிசரன் மணிமுடி நெறுநெறு நெறுவென
வசையில்பொன் மலரடி மணிவிர னிறுவினை.

இலவிதழ் மதிநுத விரதியொ டிரதம
துலைவற நடவிடு மொருவனும் வெருவர
அலைகட னெடுமுர சதிர்தர வெதிர்தரு
சிலைமத னணையடல் செயுநுதல் விழியினை.

## ஈரடி யம்போதரங்கம். (௨)

அருவமு முருவமு மாகிநின் றுமவ்
அருவமு முருவமு மகன்றுநின் றனை
சொல்லொடு பொருளுமாய்த் தோன்றிநின் றுமச்
சொல்லையும் பொருளையுந் துறந்துநின் றனை.

## ஓரடியம்போதரங்கம். (௪)

அந்நலம் விழைந்தவர்க் கறமு மாயினை
பொன்னலம் விழைந்தவர் பொருளுமாயினை
இன்னலம் விழைந்தவர்க் கின்பமாயினை
மெய்ந்நலம் விழைந்தவர் வீடுமாயினை.

## முச்சீரோரடி யம்போதரங்கம். (௪)

முத்தொழிலின் வினைமுதனீ மூவர்க்கு முழுமுதனீ
எத்தொழிலு மிறந்தோய்நீ இறவாத தொழிலினைநீ
இருவிசும்பின் மேலோய்நீ எழின்மலரின் மிசையோய்நீ
அரவணையிற் றுயின்றோய்நீ ஆலின்கீ ழமர்ந்தோய்நீ.

## இருசீரோரடியம்போதரங்கம். (௧௬)

பெரியைநீ சிறியைநீ பெண்ணுநீ ஆணுநீ
அரியைநீ எளியைநீ அறமுநீ மறமுநீ
விண்ணுநீ மண்ணுநீ வித்துநீ விளைவுநீ
பண்ணுநீ பயனுநீ பகையுநீ உறவுநீ.

எனவாங்கு - இது தனிச்சொல்.

சுரிதகம்.

கற்பனை கழன்றநின் பொற்கழ லிறைஞ்சுதும்
வெண்மதிக் கடவுண் மீமிசைத் தவழ்தரத்
தண்முகிற் குலங்க டாழ்வுறப் படிதலிற்
செங்கா லன்னமும் வெண்மருப் பேனமும்
கீழ்மே லுருவ வாரழற் பிழம்பாய்
நின்றநின் றன்மையை யுணர்த்தும்
பொன்றிகழ் புலியூர் மன்றுகிழ வோனே.

---

அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.

இதில் அராகம் நீங்கலாகத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னு மைந்துறுப்பினைப் பெற்று வருவது.

நேரசையொத்தாழிசைக்கலிப்பா.

இதில் அராகமும், அம்போதரங்கமும்நீங்கலாக, ஒருதரவும் மூன்று தாழிசையும், தனிச்சொல்லும், சுரிதகமும் ஆக நான்கு உறுப்பினைப் பெற்று வருவது.

வெண்கலிப்பா.

கலித்தளை நிறைந்து கலியோசையும், வெள்ளோசையும் தழுவி நான்கடி முதல் எத்தனையடியாயினும் வந்து ஈற்றடி மூன்று சீரால் முடிவது.

(உ-ம்.) சேல்செய்த மதவேற்கட் சிலைசெய்த சுடிகைநுதன்
மால்செய்த குழற்கோதை மகிழ்செய்ய நடஞ்செய்யும்
தருணவிளம் பிறைகண்ணித் தாழ்சடையெம் பெருமானின்
கருணைபொழி திருநோக்கிற் கனியாத கன்னெஞ்சம்
வாமஞ்சான் மணிக்கொங்கைக் கொசிந்தொல்கு மருங்குலவர்
காமஞ்சால் கடைநோக்கிற் கரைந்துருகா நிற்குமால்
அவ்வண்ண மாறிநிற்ப தகமென்று லகமகம்விட்
டெவ்வண்ண மாறிநிற்ப தின்று.

---

கொச்சகக்கலிப்பா.

தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என வைந்தாம்.

## தரவுகொச்சகக் கலிப்பா.

***கலிப்பாவிற்குரிய வுறுப்புகளெல்லா மின்றி ஒருதரவுமாத்திரம் மூன்றடியாலும், நான்கடியாலும், ஐந்தடியாலும் வருவது. தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வருவதுமுண்டு.***

### மூன்றடித்தரவுகொச்சகம்.

*வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய*
*கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்*
*கொடிபடு வரைமார்பிற் கூடலார் கோமானே.*

### நான்கடித்தரவுகொச்சகம்.

*அடிகொண்ட குறிப்பன்றே யரிபிரமர் முதலானோர்*
*முடிகொண்ட தலைவணக்கின் குனிப்பெல்லா முறைமுறைபோய்க்*
*கடிகொண்ட பொழிற்றில்லை நடராஜன் கழற்காலில்*
*குடிகொண்ட படிபோலு மிடத்தாளிற் குஞ்சிதமே.*

### ஐந்தடித்தரவுகொச்சகம்.

*நாட்டும் புகழ்வாய்ந்த நம்பலகை நாதனார்*
*கூட்டிவைக் குந்தூது கொண்டனர்கா ணம்மானை*
*கூட்டிவைக் குந்தூது கொண்டனரே யாமாயி*
*னாட்டினர்க ளெல்லா நகையாரோ வம்மானை*
*நகைப்பரென வூரொற்றி நண்ணினர்கா ணம்மானை.*

### தனிச்சொற்சுரிதகம்பெற்றுவந்ததரவுகொச்சகம்.

*மல்லாண்ட திரடிண்டோ ளடுமுதலு மணிநாவிற்*
*சொல்லாண்ட மறைமுதலும் பலராங்குத் துலைவெய்த*
*பல்லாண்டு செலச்செல்லா வினையோடும் பணிப்பெய்த*
*அல்லாண்ட நல்லிருளி லழகாடுந் தொழிலினையே.*

அதனால்.

*பல்பேரூழி செல்லினுமடிகட்*
*கொல்லையுஞ்செல்லாதாமாகலின்*
*அளவில்கால மலக்கணுற்றுழலுமென்*
*தளர்வுநோக்காய் போலுநோக்கில்*
*கருணைசெய் தருளாயல்லை*
*அருணலம்பழுத்த வாடல்வல்லோயே.*

### தரவிணைக்கொச்சகக்கலிப்பா.

இரண்டு தரவுமாத்திரம் வருவது (தனிச்சொல் சுரிதகத்துடன் வருவது முண்டு.)

(உ-ம்.) குழைதூங்கு கழைமென்றோட் கோமாரி கொலைக்கண்கள்
இழைதூங்கு முலைக்கண்வைத் தேயெய்தா நானெய்த
உழைதூங்கு குயிலேங்க வுருமுத்தீ யுகநக்கு
மழைதூங்கு பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

பீனேற்றின் றுவசத்தான் றனிதுஞ்ச விழித்தோய்நின்
ஆனேற்றின் றுவசமோ வடலேற்றி னூர்தியோ
கானேற்ற பைங்கூழின் கவளமா கணத்தின்கண்
வானேற்ற பகிரண்டம் வாய்மடுக்க வல்லதே.

### சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

ஒரு தரவும் சிலதாழிசையும் இடையிடை தனிச்சொல்லும் சுரிதகமும் வர முடிவது.

தரவு.

மறைதங்கு திருமன்றி னடங்கண்டு மகிழ்பூத்துக்
கறைதங்கு கலைநிறையிற் கோளிழைக்குங் கொல்லென்று
நிறைதங்கு தலையுவவு நிரம்பாது நிரப்பெய்தும்
பிறைதங்கு சடைக்கற்றைப் பெரும்பற்றப் புலியூரோய்.

எனவாங்கு.

தாழிசை. (௧)

வெள்ளெருக்குங் கரும்பாம்பும் பொன்மத்து மிலைச்சியெம
துள்ளிருக்கும் பெருமானின் றிருமார்பி னுறவழுத்தும்
கள்ளிருக்குங் குழலுமையாண் முலைச்சுவட்டைக் கடுவொடுங்கு
முள்ளெயிற்ற கறையரவ முழையென்று நுழையுமால்.

அதாஅன்று,

சிலைக்கோடி பொருமருப்பிற் புகர்முகனின் றிருமார்பின்
முலைக்கோடு பொருசுவட்டைக் கண்டுநின் முழவுத்தோள்
மலைக்கோடி விளையாடு பருவத்து மற்றுந்தன்
கொலைக்கோடு பட்டவெனக் குலைந்துமனங் கலங்குமால்.

அதாஅன்று,

விடமார்ந்த சுடரிலைவேல் விடலைநின் மணிமார்பில்
வடமார்ந்த முலைச்சுவட்டைக் கண்டுதன் மருப்பெக்கைத்
தடமார்பம் விடர்செய்யச் சமர்செய்தான் கொல்லென்று
கடமாவெங் கவுட்சிறுகட் கயாசுரனை வியக்குமால்.

அதனுல்,

சுரிதகம்.

சிலைமுகங் கோட்டுமச் சில்லரிக் கடங்கண்
முலைமுகங் கோட்டினைகுமால்
பலைமுகங் கோட்டுநின் மற்புய மலைநங்கே.

பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

ஒருதரவும், பலதாழிசையும், [redacted]ச்சொல்லும், சுரிதகமும் வர முடிவது.

தரவு.

ஒருநோக்கம் பகல்செய்ய வொருநோக்க மிருள்செய்ய
இருநோக்கிற் றொழில்செய்துந் துயில்செய்து மிளைத்துயிர்கள்
கருநோக்கா வகைகருணைக் கண்ணோக்கஞ் செய்ஞ்ஞானந்
திருநோக்க வருநோக்க மிருநோக்குஞ் செயச்செய்து
மருநோக்கும் பொழிற்றில்லை மணிமன்று ணடஞ்செய்வோய்.

தாழிசை. (கூ)

கடிக்கமலப் பார்வைவைத்துங் கண்ணனூர் காணுநின்
அடிக்கமல முடிக்கமல மறியாதே மறிதுமே.

முத்தொழிலின் முதற்றொழிலோன் முடியிழந்தான் றலையிழந்த
அத்தொழிலிற் கெனிற்றமியே மறிதொழிற்கும் வல்லமே.

இருக்கோல மிட்டுமின்னு முணராதா லெந்தைநின்
திருக்கோல மியாமுணர்ந்து சிந்திக்கக் கடவமே.

நான்மறைக்குந் துறைகண்டார் தோளிழந்தார் நாவிழந்திங்
கூன்மறைக்க மறைப்புண்டே முய்த்துணர்வு பெரியமே.

பலகலையுங் குலமறையும் பயின்றுணர்ந்தும் பயன்கொள்ளா
துலகலையுஞ் சிலகலையு முணராதே முணர்துமே.

அதனுல்,

சுரிதகம்.

அம்மநின் றன்மை யெம்மனோ ருணர்தற்
கரிதே யெளிதே யாதல்
பெரிதே கருணை சிறியே மாட்டே.

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

ஆறு உறுப்பும் பெற்று முறைமாறிப் பலதரவும் பலதாழிசையும் பொருந்தி வருவது.

(உ-ம்.) கலம்பகமுதலிய பிரபந்தங்களிற் காண்க.

### கட்டளைக்கலிப்பா.

முதலில் மாச்சீர்பெற்று நாற்சீரான் வருவது அரையடியாகவும், அது இரட்டித் தோரடியாகவும், அவ்வடி நான்குகொண்டு வருவது. அரையடிக் கெழுத்து முதலசை நேராயின் பதினொன்றும், நிரையாயின் பன்னிரண்டுமாம்.

### நேரசைக்கட்டளைக்கலிப்பா.

பன்னகத்துரு மாதவனும்புலிப்
பாதநாதனும் பார்த்திடத்தில்லையிற்
பொன்னதாற் செயுமன்றிடத்தாடிய
பொற்பு மேயபுராதனத்தெய்வமே
யன்னவாகனத் தன்றுணையாகும்வே
ளைந்துபூவு மடுக்கடுக்காவிடுங்
கன்னல்விற் கைச்சமர்த்திறத்தால்வருங்
காமவாரிகடந்திடச்செய்திடே

### நிரையசைக் கட்டளைக்கலிப்பா.

அனகவானவ ரும்பலதேவரு
மம்பலத்தி லநுதினங்கைதொழப்
பனகபூடண மாடிடவாடுவாய்
பத்தரெண்ணப் படியருள்பண்பனே
தினகரன்றனைச் சிறியெந்நேரமுஞ்
சித்தசன்கரியைப் புகழ்சிந்தைசேர்

னகமேனிபடந்தையர் கண்டருங்
காமவாரி கடந்திடச்செய்திடே.

## கலிப்பாவினம்.

கலித்தாழிசை, கலித்துறை, கட்டளைக்கலித்துறை, கலிவிருத்தமென நான்கு வகையாம்.

### கலித்தாழிசை.

எத்தனை சீரானும் இரண்டடியாய் ஈற்றடி மிக்குவந்து முடிவது. (இது ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவது சிறப்பு.)

(உ-ம்.) செல்லார் பொழிற்றில்லைச் சிற்றம் பலத்தெங்கள்
பொல்லா மணியைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

முத்தேவர் தேவை முகிலூர்தி முன்னனை
புத்தேளிர் போலப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

ஆங்கற் பகக்கன் றளித்தருளுந் தில்லைவனம்
பூங்கற் பகத்தைப் புகழ்மினோ வம்மின் புலவீர்காள்.

---

இரண்டடியின் மிக்குப் பலவடிகளாய் அளவொத்து ஈற்றடி மிக்கு வருவது முண்டு.

(உ-ம்.) இருகூற் றுருவத் திருந்தண் பொழிற்றில்லை
ஒருகூற்றின் கூத்தை யுணராய் மடநெஞ்சே
ஒருகூற்றின் கூத்தை யுணரா யெனின்மற்றப்
பொருகூற்றந் தோற்றப் புலம்பேல் வாழி மடநெஞ்சே.

ஈற்றடி மிகுந்து ஏனையடிகள் மிக்குங் குறைந்து வருதலுமுண்டு.

(உ-ம்.) காளி யாட கனலுமிழ் கண்ணுதல்
மீளி யாடுதல் பாடுமே
மீளியாடல் வியந்தவ டோற்றெனக்
கூளி பாடிக் குறைப்பதும் பாருமே.

கலித்துறை (கலிநிலைத்துறை.)

ஐஞ்சீரடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவது.

பானற் கருங்கட் பசுந்தோகையேமெய்ப் பயன்றுய்ப்பவத்
தேனக் கலர்கொன்றை சாரூப்பியந்தந்த செயமேலார்கிலார்
ஊனக்க ணிதுபிளை யொழுகும்புறக்கண் ணுளக்கண்ணதாம்
ஞானக்க ணேயாத னல்கும்பிரான்றில்லை நடராசரே.

கட்டளைக்கலித்துறை.

முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் கடையொருசீர் பெரும்பான்மை விளங்காயாகி வருமைஞ்சீரடி நான்குகொண்டு முடிவது. ஓரடிக்கெழுத்து முதலசை நேராயின் பதினாறும் நிரையாயின் பதினேழுமாம்.

நேரசைக்கட்டளைக்கலித்துறை.

செவ்வாய்க் கருங்கட்டைப் தோகைக்கும் வெண்மதிச் சென்னியற்கு
மொவ்வாத் திருவுரு வொன்றே யுளதவ் வுருவினைமற்
றெவ்வாச் சியமென் றெடுத்திசைபபேமின் னருட்புலியூர்ப்
பைவாய்ப் பொறியர வல்குலெந்தாயென்று பாடுதுமே.

நிரையசைக்கட்டளைக்கலித்துறை.

கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்விற்வேள்
இரும்புங் கரைந்துரு கச்செய்யு மாவிறும் பூதிதன்றே
விரும்பும் பெரும்புலி யூரெம்பி ரானருண் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக்கும் மகிலாண்டத் தொகுதியையே.

இக் கலித்துறைகள் கோவைக் கலித்துறையென்றும், திலதக் கலித்துறையென்று மிருவகையாம். மேற்காட்டிய இரண்டு செய்யுளுக்கும் கோவைக் கலித்துறைகளில், திலதக் கலித்துறையாவது ஈற்றடியிலுள்ள மூன்றும் இரண்டாஞ் சீராகத் தம்மிலே யாதல் தமது அயற்சீர்களோடாதல் ஓசைபிரிந்து மொழி பக்குவிட்டுப் பக்குவிட்ட மொழி முதற் சீரோடொன்றி ஒழுகிய ஓசைத்தாகிய சிறப்பினை யுடைத்தாய் வருவது.

வண்கொடி யேய்மதின் மாறை வரோதயன் வாணனென்னூர்
எண்கொடி யேனெய்த விவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்
நுண்கொடி யேகிடை வண்டிமிர் பூங்குழ லூபுரத்தாட்
பெண்கொடியே பிரியேன் றரியேன் நிற்பிரியினுமே.

சிறுபான்மை கட்டளைக் கலித்துறைகளின் அடிகளில் கடையொருசீர் கனிச்சீரும் வரப்பெறும்.

(உ-ம்.) "இனித்தமுடைய வெடுத்தபொற்பாதமுங் காணப்பெற்றால்"
"கயிலைச்சிலம்பிற்பைம்பூம் புனங்காக்குங் கருங்கட்செவ்வாய்"
"அன்றதென்று ரள்ளற்பள்ளத்திறேடங் கணவாணத்துமே"
"கள்ளக்கயலு மிராசியின்மீனுங் கடைப்பட்டதே"

ஒற்றைத்தள்ளி விளங்காயாகக் கொள்ளலாமெனின்-தன்ன தய்ய-சந்தங்களைத்-தன-சந்தமாக்கி அங்ஙனங் கொள்ளலாமேயன்றித்-தந்த-சந்தத்தைக் கொள்ளுதல் யாண்டையதென்பதாம்.

கலிவிருத்தம்.

நாற்சீரடிநான்காய் அளவொத்துவருவது (இதுபதினேரெழுத்து முதற் பன்னிரெண்டெழுத்தின்காறும்வரும்.)

(உ-ம்.) கூகா வென்றுகு ழைப்பதல் லாற்சமன்
வாவா வென்னில் வரேமென வல்லீரோ
தேவே சன்பயி றில்லையி னெல்லையில்
சேர்வீ ரோலந்து செய்யவும் வல்லீரோ.

வஞ்சிப்பா.

பெரும்பாலுங்கனிச்சீரும் சிறுபான்மை அயற்சீரும் பெற்றுத்தன்றளையும் பிறதளையுந்தழுவி இருசீரானுயினும் முச்சீரானுயினும் மூன்றுமுதலியபலவடிகளால் நிரம்பித்தனிச்சொல்பெற்று ஆசிரியச்சுரிதகத்தான்வருவது.

குறளடிவஞ்சிப்பா.

(உ-ம்.) வையமீன்ற மறைக்கிழவனும்
கொய்துழாய்மவுலிக் குணக்கொண்டலும்
தருவார்நீழற்றூர் வேந்தனும்
வான்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச
விமையம்பயந்த விளங்கொடியொடும்
தமனியப்பொதுவிற் றூண்டவம்புரி
தில்லைவாணநின் றிருவடிக்கீழ்
சொல்லுவதொன்றிது சொல்லக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கு
மமளியைநின்மருங் காதரித்தனை

செங்கேழ்நறுநுதற் றிருமகளோடு
மங்கவனுறைதருமாழிச் சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நல்லதருகருணையி னயந்தளித்தனை, அவன்

அதனால்

பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகி னனையவத்
திருமனை யனையவற் களித்தநின்
மெய்த்தொழி லன்றே வீடுநல் குவதே.

இதனடிதோறும் முதற்கண்ணே பொதுச்சீர் பதினாறுங்காண்க.

சிந்தடிவஞ்சிப்பா.

(உ-ம்.) கடித்தாம ரைக்கண்ணன் விழிக்கமலந்தா
வடித்தாம ரைச்சுடர்பரிதி யளித்தருளினை

அதனால்,

புதுமலர்ப் பொழிற் றில்லைவாண
உதவியின் வரைத்தோள் வடிகள்கைம்மாறே.

---

## வஞ்சிப்பாவினம்.

வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தமென மூன்றும்.

வஞ்சித் தாழிசை.

இருசீரடி நான்காய் ஒரு பொருள்மேல்மூன்றடுக்கி வருவது.

(உ-ம்.) பிணியென்று பெயராமே
துணிநின்று தவஞ்செய்வீர்
அணிமன்ற லுமைபாகன்
மணிமன்று பணியீரோ.

என்னென்று பெயராமே
கன்னின்று தவஞ்செய்வீர்
நன்மன்ற லுமைபாகன்
பொன்மன்று பணியீரோ.

அரிதென்று பெயராமே
வரைநின்று தவஞ்செய்வீர்
உருமன்ற லுமைபாகன்
திருமன்று பணியீரே.

வஞ்சித்துறை.

இருசீரடிநான்காயொரு செய்யுளேவருவது (இதில்எழுத்தோரடிக்குஐந்து முதல்ஒன்பதுவரையில்வரும்.)

(உ-ம்.) பொன்செய் மன்றில்வாழ்
கொன்செய் கோலத்தான்
மின்செய் தாடொழார்
என்செய் கிற்பரே.

வஞ்சிவிருத்தம்.

முச்சீரடி நான்காய்வந்துமுடிவது

(உ-ம்.) ஒன்றி னம்பர லோகமே
ஒன்றி னம்பர லோகமே
சென்று மேவருந் தில்லையே
சென்று மேவருந் தில்லையே.

## மருட்பா.

புறநிலைகைக்கிளை வாயுறைவாழ்த்து செவியறிவுறூஉ ஆகியபொருள்களைக் கொண்டு வெண்பாமுதலில்வந்து அகவல் பின்னாகவருவது.

கைக்கிளைமருட்பா.

ஒருதலைக் காமத்துக்குரியகாட்சி ஐயம், துணிவு, குறிப்பறிவு முதலாகிய பொருள்பெற்றுவருவது.

(உ-ம்.) பருந்தளிக்கு முத்தலைவேற் பண்ணவற்கேயன்றி
விருந்தளிக்கும் விண்ணோர் பிறர்க்குந் திருந்த
வலனுயர் சிறப்பின் மன்ற வாணனைக்
குலமுனி புதல்வனுக் கீந்த
அலைகட லாடுமிவ் வாயிழை நோக்கே.

### புறநிலைமருட்பா.

புலவோர்கள் பிறரைவாழ்த்தும் பொருளுக்கிடனாய் வருவது.

(உ-ம்.) அரசியல் கோடா தரனடியார்ப் பேணும்
முரசிய றானைவேன் மன்னர்-பரசோன்
கழலிணைப் பொதுவில் காப்பாக
வழிவழி சிறந்து வாழியோ பெரிதே.

### வாயுறைவாழ்த்துமருட்பா.

அறிஞர் பிறருக்குச்சொல்லும் உறுதிசாதனப்பொருளால் வருவது.

(உ-ம்.) வம்மி னமராங்காண் மன்றுடையான் வார்கழல்கண்
டெய்ம்மி னுறுதி பிறிதில்லை-மெய்ம்மொழிமற்
றென்மொழி பிழையா தாகும்
பின்வழி நுமக்குப் பெரும்பயன் றருமே.

### செவியறிவுறூஉ மருட்பா.

ஆன்றமேலோர் அரசர்க்குணர்த்தும்நீதிமுறையின்நிலைமைப்பொருளால் வருவது.

(உ-ம்.) வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றம்
தாழ்த்துமின் சென்னி தலைவற்கு-வீழ்த்த
புறநெறி யாற்று நறநெறி போற்றி
நெறிநின் றொழுகுதிர் மன்ற
துறையறி மாந்தர்க்குச் சூழ்கட னிதுவே.

## நூற்பா (சூத்திரம்.)

சில்வகை யெழுத்துக்களாளாகிய சொற்றொடராய்ப் பல்வகைப்பொருள்களை விளக்கித்திட்பமுநுட்பமுமமைத்துச் சீர் அடி தொடை முதலியவளாய றையின்றிவருவது.

(உ-ம்.) அவனவளது வெனவவைமூ வினைமையின்
தோற்றியதிதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்.

## * வண்ணப்பா.

சந்தக்குழிப்புக்களை யாதாரமாக்கொண்டு வருவன. அவையாவன-தத்த-தாத்த-தந்த-தாந்த-தன-தான-தன்ன-தய்ய-எனவெட்டாம்.

இவ்வெட்டும்-தத்தா-தாத்தா-தந்தா-தாந்தா-தனா-தானா-தன்னா-தய்யா-எனஅந்தம்நீண்டெட்டுகப்பதினாறும்.

(உ-ம்.) தத்த-பத்தி,ஒற்றர்,சிட்டன்,கொய்த்து,மெய்ச்சொல் கர்த்தன்.

தாத்த-காற்று,பாட்டர்,கூத்தன்,பார்ப்பு,தூர்த்தன், காழ்த்தல்.

தந்த-மஞ்சு,கொண்கர், கந்தன்,மொய்ம்பு,மொய்ம்பர், மொய்ம்பன்.

தாந்த-வேந்து,வேந்தர்,பாங்கன்,பாய்ந்து,சார்ங்கர், சார்ங்கம்.

தன-குரு,தவர்,சுதன்.

தான-காது,சூதர்,பாதம்,கேள்வி,சார்கண்,கூர்முள், மான்மி,தேன்வி,மாண்மன்,கூன்வில்,மான்மர்,மாண்விண்.

தன்ன-கண்ணி,மென்வி,அண்ணன்,பொன்வில், முன்னர்,என்வெண்.

தய்ய-வள்ளி,செய்தி,வள்ளல்,செய்தல்,மெய்யன், செய்கண்.

தத்தா-அத்தா-கற்றார்,தெட்டான், பொய்க்கோ,செய்க்கோல், மெய்க்கோன்.

தாத்தா-சாத்தா,ஆற்றார்,மாற்றான்,வேய்ப்பூ,வாய்த்தோர், சீர்க்கோன்.

தந்தா-அந்தோ,தங்கார்,வந்தேன்,மொய்ம்பா,மொய்ம்போர், மொய்ம்போன்.

---

* இவ்வண்ணப்பா ஆசிரியப்பாவினினமே. விரிவுபற்றிக்கடையிற் சேர்க்கப்பட்டது.

தாந்தா-சேந்தா,வாங்கார்,சான்றான்,நேர்ந்தோ,சார்ந்தார், மாய்ந்தான்.

தனா-குசா,சிறார்,கவான்.

தானா-தாதா,போகார்,மேவான்,ஓர்பு,கூர்வேல்,சேர்மான், கேண்மோ,ஆன்மா,ஆண்மான்,கூன்வாள்,வான்மேல், தேன்வீண்.

தன்னா-அண்ணா,மன்வா,முன்னோன்,அன்னோர், பொன்வேல், தண்வான்.

தய்யா-மெய்யே,கொய்தோ,தள்ளார்,செய்தார்,வல்லோன், ஒல்கேன்.

## அரைச் சந்தம்

இப்பதினாறன்மேல்-ன-னா-உயிர்மெய்வரினும்,இவ்வுயிர்மெய்யோடு-த-ம-ஒற்றுவரினும்-த்-ம்-தனியே அப்பதினாறுடன்வரினும் அரைச்சந்தமாம்.

(உ-ம்)

தந்தன- தந்தனா-தந்தனத்-தந்தனாத்-தந்தனம்-தந்தனாம்- தந்தத், தந்தம்.

---

வலித்தல் மெலித்தல்களால் தய்ய வென்பது தன்ன-தனவாம்.

| வலித்தல். | மெலித்தல். |
|---|---|
| நெய்நி-தய்ய | தொய்வு-தய்ய |
| நெய்நி-தன்ன | தொய்வு-தன |
| வர்ம-தய்ய | செய்கை-தய்ய |
| வர்ம்ம-தன்ன | செய்கை-தன |

தன்னச்சந்தமானது மெலிவால்தனவாம்.

(உ-ம்)

சண்மு-தன்ன
சண்மு-தன
மன்வில்-தன்ன
மன்வில்-தன.

### வண்ணக்குறளடி.

(உ-ம்.) தானா தனதன

பாணார் மொழிநிறை
சோணா சலரடி
பேணா தவனுறு
மாணா நரகமே.

### வண்ணச் சிந்தடி.

தனன தானன தந்தனா

நரக வாதையில் வன்பிறார்
தரணி மீதொரு கோன்பெறார்
சுரரு லோகமு மின்புறா
ரருணை நாயக ரன்பறார்.

### வண்ண வளவடி.

தானத் தானன தானத் தானன

தேனைப் போல்கவி மாலைச் சீரியர்
வானைச்சீயென வாழ்விட் டாள்பவன்
மானைச் சீறுகண் மாதர்க் கோரிறை
யானைக் காவுடை யானிற் பாதியே.

### வண்ணக்கட்டளைக்கலித்துறை.

தனதத்தத் தனதத்தத் தனதத்தத் தனதத்தத் தனதானா
பொலிவற்றுத் தினமற்பக் கலைகற்றுந்தெருளற்றுப் பொருண்மாலே
சொலிவைத்துப் புகழ்கெட்டுப் புவனத்திற் றளர்வுற்றுச் சுழலாமே
புலியக்கத் ததளைச்சுற் றரைபொற்பத் திருவொற்றிப் புணர்வார்பா
லொலிமுற்றுத் துதிசொற்றுக் கதிபெற்றுப் பயன்மிக்குற் றுயர்வாயே.

### அறுசீர்வண்ணவிருத்தம்.

தனதன தனதன தய்யன தய்யன தனதன தனதனா
முதலிடை கடையள வில்லவ ருள்ளவர் முழுவது நிறைபவரா
மிதமுறு மிசைவளர் தய்யலை மெய்யினி லியனுடனணைபவரா

றுதலினி லொருசுத னிவ்வுல குய்வகை நொடியினி லருள்பவராம்
விதபிர மபுரியி னல்லவர் நள்ளிட விழைவுட னுறைபவரோ.

### எழுசீர்வண்ண விருத்தம்.

தானதன தானதந்த தானதன தானதந்த
தானதன தானதந்த தனதானா

பாவையரை யேவிரும்பி நாளுமவ ரோடுறைந்து
பாழுமன மேமெலிந்து நலியாதே

பூவலய மேலனந்த லோபிகளை யேபுகழ்ந்து
போதவறி வேயிகழ்ந்து மெலியாதே

நாவலர்குழாமொடுகந்து பூதிமணி யேயணிந்து
ஞானசிவ யோகமென்று புரிவேனோ

ஆவலுடன் மாமுகுந்த னோடுமய னார்வணங்கு
மாதிபுரி வாழவந்த பெருமானே.

சந்தங்களில் சிலபலசேர்ந்து ஒருதுள்ளலாம். துள்ளல்மூன்றுகொண்டது ஒருகுழிப்பாம். குழிப்பொன்றும் ஒருசிறுதொங்கல் துள்ளலுஞ்சேர்ந்தொருகலையாம். கலையெட்டுக் கொண்டதுவண்ணம்.

### இருதுள்ளல்கொண்டகலையால்வந்தவண்ணம்.

மின்னலையொத் தேயுற் றிருக்கின்ற வாழ்விலே
வெம்மையுறத் தான்மிக் கிளைப்புண் டிடாமலே

யின்னலறுத் தேசிற் சுகத்தின்கண் மேவுமா
யென்னையெடுத் தாணற் றமிழ்ச்சந்த மோதுவேன்

வன்னமலர்ச்சோலைத் திருச்செந்தி னாயகா
வண்ணமிசைப்பாரைப் புரக்குந்தயாபரா

தென்னணிவெற் பானுக் குவப்பொன்று தேசிகா
சென்னைநகர்க் கோயிற்றிருத்தண்ட பாணியே.

## எண்கலை வண்ணம்.

தந்த தானன தனதன தனதன தனதான

கஞ்சமாமலர் பைங்கொடி யெனவளர் தனி
யஞ்சவாகன முதுகினில் வருமதி
கன்றியேபல வுடலினி லலைதர விதியாலே

தங்குமேயெனு மிதமுறு வபகடதில்
வெம்புதூதுவர் பொதிதர வனலுமிழ்
கண்டவானவை சினமிக மிகவொளி ணைகிடாதே

பஞ்சுவாள் விழியரிவையர் படைபொரி
தென்றலேறியொர் கணைமதி மலரிசை
சம்பிரமுடர் சமர்புரி தரமத னடையாதே

அந்தவாறுறை யரியய பரந்தின
நின்றுதேடிட வழிபடு மிருமுனி
யன்றுகாணுற வருளிய திருவடி தருவாயே

செஞ்சொலார்தரு தவமுனி முதலைபர
வெங்கடேசித மணியென வருமனை
சிங்கவாகனி பகவதி திரிபுரை ரிணைவாளா

செங்கைவேல்கொடு கரிமுக னிமுகன்
மிண்டுசூருயிர் கடல்வரை யடுமயர்
செந்தில்மேவிய சரவண குகனருள் விழியானே

மஞ்சுமாமதி வரநதி குலவு
கொன்றைநாகமி யறுகணை வேணி
மங்களாகர மிகுசைவை மிசை யுடையானே

வண்கொண்மாமறை யுயர் சிகர்பசுமை
கொம்புமேவிடும் வரமதை யுதவிட
வந்துமாதையில் வதிதரு மழகிய பெருமானே.

இவ்வண்ணமிக்குவருங்கால் அடிக்குநாலுகலையாகவும், எட்டுக்கலையாகவும், பதினாறுகலையாகவும் வரும். இவற்றின்விரிவை அபரவருணகிரிநாதரருளியவண்ணத்தியல்பிற்காண்க.

கட அள் தளை.

# ஒழிபியல்.

சீருந் தளையுங் கெட வந்தவிடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு பெறாவாம்.

குற்றியலுகரம்.

கொன்று கோடுநீடுகுருதி பாயவும்
சென்று நீடு செழுமலை பொருநர்:-

இவ்வஞ்சிப்பாவினுள் குற்றுகரம்வந்து ஐஞ்சீரானதால் குற்றுகரங் களைக்கழித்து இருசீரடிவஞ்சிப்பாவாகக்கொள்க.

குற்றியலிகரம்.

ஒறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்காலுனைப்
பெறுநன்றி யின்றுயா பெரிதெனல் - றுறுநன்றி:-

இதனுள்-இன்றிவர்க்கியா - என்புழி கூவிளங்கனிபோல் வந்து வெண்சீ கெட்டமையால் குற்றியலிகரத்தை நீக்கிக் கூவிளங்காயாகக்கொள்க.

குழலினி தியாழினி தென்பர்தம் மக்கள்
மழலைசொற் கேளா தவர்.

இதனுள்-தியாழினி-என்புழி விளமுன் நிரைவந்து தளைகெட்டமையால் குற்றியலிகரத்தைக்கழித்து விளமுன்நேரைக் கொள்க.

உயிரளபெடை.

நாஉஉ நா றென்பா றுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாஅஅமா வென்றளந்த மண்.

இதனுள்-நாஉஉ நா-என்புழி நாலசைச்சீர் வெண்பாவில் வந்தமையால் உயிரளபெடையைநீக்கி மூவசைச்சீராகக் கொள்க.

ஒற்றளபெடை-ஆய்தம்.

சீர்தளைகெடவரின் ஒற்றும்,ஆய்தமும் அளபெடுத்துத் தனிக்குறில்போல நேரசையாம்.

(உ-ம்.) கண்ணன் கருவிளை கார்முல்லை கூவிளமா
மென்னன் பொருசுனைக்கு போழ்வா யிலவம்பூ:—
எண்ணி லிலங்கிய வையாரா யின்னுயிர்
வெண்ணீ ருவார்க ளில்லை வீடு.

௩.

இரண்டு மாத்திரையாயினையுடைய நெட்டெழுத்தாகிய-ஐ செய்யுட்களில் குற்றெழுத்தாகக்குறுகிவரும், நெடிலோடுகூடி நிரையசையாம்.

(உ-ம்) அன்னையை யானோவ தாவா மனையிலாப்
புன்னையை யானோவல் புறந்து.

௪

செய்யுளில் முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழிய றிந்து குற்றப்படாமல் வண்ணமறுத்தல் வேண்டும்

(உ-ம்.) கடியார்பூங் கோதை கடாயினான் பின்போர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து.

இதனை, கடியார்-பூங்கோதை-கடாயினான என அலகிடின் ஆசிரியத்தளையும், கலித்தளையுந்தட்டு, வெள்ளைத்தன்மை குன்றுமாதலால், கடியார்பூ-கோதை-கடாயினான் எனறு அலகிடல்வேண்டும்.

மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசைநீடுவாழ்வார்.

இதனை, நிலமிசை-நீடு-வாழ்வார் என்று அலகிடின் ஆசிரியத்தளைதட்டு வெண்பாவினிறுதிக்கண் அசைச்சீராகற்பாலது இயற்சீராய்முடியும், ஆதலால் நிலமிசை-நீடுவாழ்-வார் என அலகிடல்வேண்டும்.

பாடுநர்க்கு மாடுநர்க்கும் பண்டுநாங் கொண்டவர்க்கும்
ஊடுநர்க்குங் கூடுநர்க்கு மொத்தனவாம்-நீடுநீர்
நல்வயலூர நறுஞ்சாந்தணியகலம்
புல்லலினூடலினிது.

இதனுள்-டகர நகரங்கள் பிரிந்திசைத்தன வாயினும் இரண்டினையுங்கூட்டிநிரையசையாக அலகிடச் சீருந்தளையுஞ்சிதையாவாம் அல்லாவிடின், நாலசைச்சீராய் வண்ணமழிந்து ஓசையுங்குன்று கெடும்.

## சீர்.

தேமா, புளிமா, வென்று நேரீற்றியற்சீரிரண்டும், கருவிளங்கனி, கூவிளங்கனி என்னுநிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீ ரிரண்டுங்கலிப்பாவினுள்வாரா. கருவிளங்கனி கூவிளங்கனி என்னுமிரண்டும்ஆசிரியப்பாவினில்வாரா. ஒழிந்தசீர்களெல்லாம்பாவினுள்ளும் பாவினத்துள்ளும்மயங்கும் ஆயினும், வஞ்சியுரிச்சீர் நான்கும்வெண்பாவில் வாரா.

## தளை.

எல்லாத்தளையும் எல்லாப்பாவினுள்ளும், பாவினத்துள்ளும் மயங்கப்பெறினும் வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையு மல்லது வேறுதளைவாராது

## அடி.

இயற்சீர் வெண்டளையால்வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் ஆசிரியப்பாவினுள் வந்துமயங்கும். ஆசிரியவடியும் கலியடியும் வஞ்சிப்பாவினுள்விரவிவரும், வெண்பாவடியும் ஆசிரியவடியும் கலிப்பாவினுள் புக்கு மயங்கும்.

## தொடை.

### அடிமோனைத்தொடை.

அடிதோறு முதலெழுத் தொன்றிவரத்தொடுப்பது.

(உ-ம்.) மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே.

### இயைபுத்தொடை.

அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவருவது.

(உ-ம்.) இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே.

## அடிமுரண்டொடை.

அடிதோறு முதற்கண் முரண்படத் தொடுப்பது.

(உ-ம்) இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இருடி யன்ன கருங்கோட் டுப்புன்னை
பொலஞ்சுனி யன்ன நுண்டா திறைக்குந்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருந்தட மழைக்க ணுழைப்பா லணங்கே.

## அடியளபெடைத்தொடை

அடிதோறு முதற்கண்ணே யளபெடுத் தொன்றிவருவது

(உ-ம்) ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டிஇ ரையுங் கொண்டுதன் பள்ளியுட்
டூஉந் திரையனைப் பயந்தா திறைவன்றேன்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்

## அந்தாதித்தொடை.

ஓரடியினந்தத்திலுள்ள எழுத்தாவது சீராவது அடியாவது மற்றோரடிக்கு ஆதியாய்வருவது.

(உ-ம்) உலகுடன் விளக்கு மொளிதிகழ் அவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து

துன்னிய மாந்த ரீமெ தெனப்
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.

இரட்டைத்தொடை.

அடிமுழுது மொருசொல்லே வரத்தொடுப்பது.

(உ-ம்.) ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெறி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.

செந்தொடை.

மோனை முதலாகிய தொடையும் தொடைவிகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது.

(உ-ம்.) பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தானே.

இயைபு.

இணையியைபு முதலிய* எழுவிகற்பமும் வருமாறு.

(உ-ம்.) மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயலே யியலே அதனால்
இவ்வயி னிவ்வுரு வயங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே.

*இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்றென்பன.

## எதுகை.

இணை எதுகை முதலிய வெழுவிகற்பமும் வருமாறு.

(உ-ம்.) பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திய
மன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழன் மன்னிய
மயிலே சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணைம் மதிமுகத் தாளே.

## முரண்.

இணைமுரண் முதலாகிய வெழுவிகற்பமும் வருமாறு.

(உ-ம்.) சிறுபுறப் பேதை செல்லுநெற் குறுபு
கருங்கய னுகர்ப்பிற் பெருநல டங்கிக்
குவிந்தகண் கருப்பிய நெடுங்கை விரிந்த
சிறிய பெரிய நிகர்மணிக் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
இருங்கையுங் கையு மேந்தெழி லியக்கமுந்
துவர்வாய்த் திருந்தொளி முவந்தெனை முனியாது
என்று மின்னண் பாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே.

## அளபெடை.

இணையளபெடை முதலாகிய வெழுவிகற்பமும் வருமாறு.

(உ-ம்.) தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சேஒர் பாஅல்
மீஇ ஊஅர்ந் துகளுஞ் சீஇர்
ஏஎ ஊஅ நீஇ ணீஇர்

ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா குவே.

**ஆசிரியப்பா - கலிப்பா.**

**இவைகளில்** சமச்சீரியநாற்சீரடியினுமிகுந்து ஐஞ்சீரடியும் அரிதாய்வரும்.

**ஆசிரியப்பா.**

(உ-ம்.) உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
யூர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்கா
டின்னா வென்றி ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே

கலிப்பா.

(உ-ம்.) நானாரென் னுள்ளமார் ஞானங்க ளாரென்னையாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேன் மதிமயங்கி
யூனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
றேனார் கமலமே சென்றூதாய்க் கோத்தும்பீ

**கூன்.**

வெண்பா, கலிப்பா, ஆசிரியப்பா இவைகளின் முதலிலும், வஞ்சிப்பாவின் **இடையிலும் கடையிலும்** ஒருசீர் வருவது.

வெண்பா

(உ-ம்.) **உதுக்காண்** - சுரந்தானா வண்மைச் சுவாணபாதன்
பரந்தானாப் பல்புகழைப் பாட - இரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்கி
மின்னு மணிநேர் மறை.

**ஆசிரியப்பா.**

(உ-ம்.) அவரோ - கேடில் விழுப்பொருடருமார் பாசிலை
வாடா வல்லியங் காடிறந் தோரே,
யானே - தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமைசேக்கையுட் படர்கூர்ந்திசினே.

**கலிப்பா.**

(உ-ம்) **உலகினுள்** - பெருந்தகையார்பெருந்தகைமைபிறழாவேபிறழினு
மிருந்தகையவிறுவரைமேலெரிபோலச்சுடர்விடுமே

சிறுதகையார்சிறுதகைமைசிறப்பெனினும்பிறழ்வின்றி
யுறுதகைமையுலகினுக்கோரொப்பாகித்தோன்றுவே.

வஞ்சிப்பா.

(உ-ம்.) மாவயவங்களின் மயக்குற்றன-வழி
கலங்கழாலித்-துறை-கலக்குற்றன

---

கலிவெண்பாவும் - வெண்கலிப்பாவும்.

இவையிரண்டினையும் ஒன்றெனக்கொண்டு கலிப்பா வினத்திற்சேர்த்துள்ளார் பலயாப்பாசிரியர். கலிவெண்பாவானது வெண்டளைபிழையாது தனிச்சீர்பெற்றுப் பலவடிகளால்வருவது. வெண்கலிப்பாவானது கலித்தளையும் வெண்டளையும் விரவித்தனிச்சொற்பெறாது பலவடிகளால்வருவது. கலிவெண்பாவில்கலித்தளைவிரவின் இன்னோசைப்பயத்தலை எஃசெவியுநுண்ணுணர்வுமுடையாரறிவர். கலியெனவிசேடித்தலின் கலித்தளை விரவு வேண்டுமென்பாராயின், வெண்பாவிருத்தத்தில்வெண்டளைவிரவாமையை யறிவாராக. கலியென்பது இங்குமிகுதியைக்குறித்தது. ஆகலின்கலிவெண்பாவினை வெண்பாவினத்திற் சேர்த்துள்ளேம். அக்காலத்து வீரசோழியவாசிரியர், இக்காலத்து முத்துவீரியவாசிரியர்சம்மதமு நம்மதே.

தரவு - தாழிசை.

அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பாவும், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவும் நீங்கலாக, மற்ற கலிப்பாக்களுக்குத் தரவு மூன்றடியேசிறுமை, பெருமை பாடுவோனது பொருண்முடிபுகுறிப்பே.

அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவிற்கும், பெருக்கஞ்சுருக்கமில்லை. ஆறடியேதரவு, பொதுவகையால்தாழிசைச்சொல்லிப்போந்தாராயினும் தாழிசைக்கிரண்டடி சிறுமை, நான்கடிபெருமைமூன்றடியானும்வரும்.

வண்ணப்பா.

இப்பாக்களில்குழிப்புச்சிதைவும், கொடுந்தமிழ்ப்புணர்ப்பும், அளபெடைச்சேர்க்கையுமாகாவாம், வடமொழிமரூஉச் சொற்கள்புணரின் சுவைகுன்றும்.

துறுக்கல்.

(உ-ம்.) யானை யெருத்தத்திருந்த விலங்கிலைவேற் றென்னன்
திருந்தார்நன்றென்றேன்றியேன்.

இதில்தியேனென்பது தியேனெனக்குறுக்கும் வழிகுறுக்கலாம்.

## குறை.

தலைக்குறை, இடைக்குறை, கடைக்குறையெனமூன்றாம்.

### தலைக்குறை.

(உ-ம்.) மரையிதழ் புரையுமஞ் செஞ்சீறடி.

இதில்தாமரையென்பது மரையென முதற்குறைந்தது.

### இடைக்குறை.

(உ-ம்.) வேதினவெரிநினோதி முதுபோத்து.

இதில்ஓந்தியென்றது ஓதியென இடைகுறைந்தது.

### கடைக்குறை.

(உ-ம்.) நீலுண்டுகிலிகை கடுப்ப.

இதில்நீலமென்பது நீலெனக்கடைகுறைந்தது.

---

## ஆனந்தம்.

எழுத்தானந்தம்,சொல்லானந்தம், பொருளானந்தம்,யாப்பானந்தம்,அணியானந்த மெனவைந்தாம்.

### எழுத்தானந்தம்.

(உ-ம்.) ஆழியிழைப்பப்பகல் போமிறவெல்லாந்
தோழிதுணை யாய்த்துயர் தீரும்-வாழி
நறுமாலைத்தாராய் திரையவோ வென்றாஞ்
செறுமாலை சென்றடைந்தபோது.

இதனுள் திரையனென்றதுதிரையவோஒ என எழுத்துநிலைபிறழ்ந்துஅளபெடையெடுத்தது எழுத்தானந்தம்.

### சொல்லானந்தம்.

(உ-ம்.) என்னிற்பொலிந்த திவண்முக மென்றெண்ணியே
தன்னிற் குறைபடுப்பான் றண்மதிய-மின்னி
விரிந்திலங்குவெண்குடைச்செங்கோல் விசய
னெரிந்திலங்கு வேலினெழும்.

இதனுள் விசயனென்ற சொல்லையடுத்து எரிந்துஎன்றுசொன்னிலைபிறழ்ந்துவந்த சொல்லானந்தம்.

### பொருளானந்தம்.

(உ-ம்.) வலிக்குமாம் மாண்டார்மனம்.

இதனுள்மாண்டாரென்பது மாட்சிமைப்பட்டாரெனவும், இறந்தாரெனவும் பொருள்பட பொருணிலைபிறழ்ந்த பொருளானந்தம்.

### யாப்பானந்தம்.

(உ-ம்.) மறுக்குமுதல்வ னிதிவாழ் வான்றிலோர
மறுக்கு நிகர்யானை வகுப்பாம்.

இதனுள் இராமனென்றது முதலடியீற்றிலும் இரண்டாமடித்தலையிலுமாகப் பிறழ்ந்துவந்த யாப்பானந்தம்.

### அணியானந்தம்.

(உ-ம்.) இந்திரனே போலுமிளஞ் சாத்தன் சாத்தற்கு
மந்திரமே போன்றிலங்கு மல்லாகம்.

இதனுள் சாத்தனாகிய கீழ்மகனை யரசனைப்போலுவமித்து அணிபிறழ்ந்த அணியானந்தம்

### குறிப்பிசை.

எழுத்தோசை பலவாக முற்கு வீணை இலதை அநுகரணமுதலியன செய்யுளகத்துவந்தால் அவற்றையும் அசையுஞ்சீருமாக அலகிட்டுத்தளையும் அடியும் தொடையும் பிழையாமற் கொண்டு நிரப்புதல்.

(உ-ம்) மாற்றலங் கொன்றை மலர்வேய்ந்து மலைமேற
வென்று திரி மிடைமகளோடு சென்று
மரியாட்டை யுண்டானல் வண்மையால் வல்லோ
மறிபாயோ வண்ணா குமாது.

### ஒப்பு.

சீர் தளை முதலியனவரையறுக்கப்பட்ட செய்யுளுட்சில சொன்ன பெற்றியிற்றிரிந்துமிகுந்துங்குறைந்தும்வந்தாலும்ஒருபுடையொப்புமைநோக்கிச்சார்த்தி அங்ஙனந் தவறிய செய்யுட்களையும இலக்கணநெறியால் முன்னோதிய செய்யுட்களின் பாற்படுத்திக்கொள்ளுதல்.

(உ-ம்,) கோழியுங் கூவின குக்கில் குரலியம்பும்
தாழியு ணீலந் நடங்கணீர் போதுமினோ
வாழிகுற் றவைய நறிவனடியேத்திக்
கூழை நனையக் குடைந்து குளிர்புன
லூழியு மன்னுவா மென்றேலோரெம்பாவாய்

நாற்சீர்நாலடியான்வருவது கலிவிருத்தமென்று வரையறுக்கப்பட்டிருப்பினும் இஃதைஐந்தடியால் வந்தமையின் ஒருபுடையொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்தும். இதனைத்தரவுகொச்சகமெனினுமிழுக்காது.

பிறவும் புராணகவிஞராற்பாடப்பட்ட இலக்கியங்கள்மிக்குங் குறைந்தும் வரினும் இவ்விலக்கணத்தால் ஒன்றன்பாற் படுத்திக்கொளவேண்டும்.

கடவுள்துணை.

# *பாட்டியல்.

## பாட்டு.

பாவுறுப்பு மேற்கொண்டொலிக்கும்பாட்டு ஆசுகவியென்றும், மதுரகவியென்றும்,சித்திரகவியென்றும்,வித்தாரகவியென்று நான்குவகைப்படும்.

### ஆசுகவி.

ஒருபுலவனிவ்வெழுத்தானுதல், இச்சொல்லானுதல், இப்பொருளானுதல், இவ்வணியானுதல், இப்பாட்டானுதல், இவ்வெழுத்தாதிஇவ்வெழுத்தந்தம், இச்சொல்லாதி இச்சொல்லந்தமாகப்பாடுவாயென்று கூற,அப்பொழுதே அவனகருத்துக்கு ஒப்பப்பாடுவோன்.

### மதுரகவி.

தொடையும் தொடைவிகற்பமும் செறியச் சொற்சுவையும் பொருட்சுவையும்விளங்க உருவகவணிமுதலிய முப்பத்தைந்தணிகளோடு அலங்காரம் பெறப்பாடுவோன்.

### சித்திரக்கவி.

ஏகபாதமும் எழுகூற்றிருக்கையுங் காதைக்காப்புங்கரந்துறைச்செய்யுளும் கூடச்சதுக்கமும் கோமூத்திரியும் இவைமுதலிய வறிந்துபாடுவோன்.

### வித்தாரக்கவி.

மறம் கலிவெண்பா மடலூர்தல் இயல் இசை பாசண்டத்துறை பன்மணிமாலை மும்மணிக்கோவை கிரீடை இவைமுதலியன பிறவும் விரித்துப்பாடுவோன்.

## புலமை.

கவி கமகன் வாதி வாக்கி இவைநான்கும் புலமைக்கியல்பு

### கவி.

ஆசுகவி மதுரகவி சித்திரகவி வித்தாரக்கவி அறிந்து பாடவல்லவன்.

---

* பாட்டியலென்பது பாட்டின்கண்ணவாகிய இலக்கணமுணர்த்தித்தன்னுடையபின்மை நீக்கித்தலைமை பற்றியபெயராய் நின்றது. இவ்வியலோடு செய்யுளியற்கு வேற்றுமை யென்னையெனின் அது செய்தல் செய்யுளெனநின்றுசெய்யுட்செய்தலிலக்கணமாயிற்று.

### கமகன்.

ஞானவிசேடத்தாலேயாதல்கல்விப்பெருமையாலேயாதல் ஒருவன்சொல்லிய நூல்விகற்பத்தைத்தான் பயிலாதிருந்தும் பொருள் விரிக்கவல்லவன்.

### வாதி.

எடுத்துக் கொண்டகோளுக்குப் பொருந்தினமேற்கோளும் காரணமும் அவையிரண்டிற்குப்பொருந்தினவெடுத்துக்காட்டும்சொல்லிமுடிக்கவல்லவன்.

### வாக்கி.

அறம் பொருள் இன்பம் வீடென்பனதம்மில்விரவாமற்கேட்டோர் விரும்ப இலக்கணத்தையாதல் இலக்கியத்தையாதல் செஞ்சொல்லால் விளங்கச்சொல்லவல்லவன்.

---

## பொருத்தம்.

### மங்கலப்பொருத்தம்.

திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் இவற்றின்பரியாயப் பெயரும் பிறவுமாம்.

### சொற்பொருத்தம்.

முதலெடுத்துக்கொண்ட மூவசைச் சீரியவாகிய சொற்கள் மங்கலத்தவாயினும் வகையுளி சேர்ந்தனவும் சிறப்பில் சொல்லும் பலபொருட் கேற்ற சொல்லும் பொருளில்சொல்லும் தோன்றல் திரிதல் கெடுதலென்னும் விகார விறுதிச் சொல்லும்வைக்கப்படா.

### எழுத்துப்பொருத்தம்.

ஒற்றுட்படமூன்றும் ஐந்தும் ஏழும் ஒன்பதுமாகியவெழுத்தால் முதன் மொழிக்குவருவது நன்று. * நான்கும் ஆறும் எட்டுமாகிய வெழுத்தால் முதன் மொழிக்குவருவதுதீது.

### தானப்பொருத்தம்.

குற்றெழுத்தைந்தோடும் தமக்கொத்த நெடிலைச்சேர்த்து இகரம் உகர நின்றதானத்து முறையே ஐகாரஔகாரங்களைச் சேர்த்தால் உயிரும் உயிருமெய்யுமென்று சொல்லப்பட்டதொகையெல்லாம் ஐந்துகூறாயடங்கும், இவற்றைப்பாட்டுடைத்தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத் தொடங்கிப் பாலன் குமரன் இராசன் மூப்பு மரணமென வருவித்தால் கடையிரண்டும் ஆகா.

---

* உலகம் அமுதம் ஆரணம் எழுத்து எனப்பிறழ்ந்து வருமேனும் மங்கலத்தால் அமைவுடைய என்க.

### பாற்பொருத்தம்.

குற்றெழுத்தெல்லாம் ஆண்பால், நெட்டெழுத்தெல்லாம் பெண்பால், ஆய்தமும் மெய்களும்பேடு. பெண்பாற்குப் பெண்பாலெழுத்தும் ஆண்பாற்குஆண்பாலெழுத்தும் ஆம். இருமையுமயங்கிப் புணரிற் குற்றமாம்.

### உணாப் பொருத்தம்.

அ இ உ எ ஆகிய நான்குயிரும், க ச த ந ப ம வ ஆகிய எழுமெய்யும் அமுதவெழுத்தாம், யா யோ ரா ரோ லா லோ இவ்வாறுமெய்யும் ய ர ல ஆகியமூன்றுமெய்யும் உயிரளபெடையும், ஒற்றளபெடையும், மகரக்குறுக்கமும் ஆய்தமும் * நஞ்செழுத்தாம்.

### வருணப்பொருத்தம்.

பனிரண்டுயிரும் வல்லெழுத்தாறும் பார்ப்பாருக்காகும். த ந ய ர ப ம இவ்வாறு மெய்யும் அரசருக்காகும. ல வ ற ன இந்நான்கு மெய்யும வணிகருக்காகும். ழ ள இவ்விரண்டுமெய்யும். சூத்திரருக்காகும்

### நாட்பொருத்தம்.

அ ஆ இ ஈ கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ பூராடம், ஒ ஓ ஔ உத்திராடம், க கா கி கீ திருவோணம், கு கூ திருவாதிரை, கெ கே கை புனர்பூசம், கொ கோ கௌ பூசம், ச சா சி சீ இரேவதி, சு சூ செ சே சை அச்சுவினி, சொ சோ சௌ பரணி, ஞ ஞா ஞெ ஞொ அவிட்டம், த தா சோதி, தி தீ து தூ தெ தே தை விசாகம், தொ தோ தௌ சதயம், ந நா நி நீ நு நூ அனுடம், நெ நே நை கேட்டை, நொ நோ நௌ பூரட்டாதி, ப பா பி பீ உத்திரம், பு பூ அத்தம், பெ பே பை பொ போ பௌ சித்திரை, ம மா மி மீ மு மூ மகம், மெ மே மை ஆயிலியம், மொ மோ மௌ பூரம், ய யா உத்திரட்டாதி, யு யோ மூலம், வ வா வி வீ உரோகணி, வெ வே வை வௌ மிருகசீரிடம்.

பாட்டுடைத்தலைவன் பெயரின் முதலெழுத்திற்கு உரியநாள் தொடங்கி, உறுகின்ற இருபத்தேழு நாளினையும் ஒன்பதொன்பதாகப்பகுத்துச் சென்மம் அநுசென்மம், உபசென்மமென்று கூறப்பட்டமுப்பகுதியினும்ஒன்று மூன்று ஐந்து ஏழு எண்ணின் வந்தநாட்கள் பொருத்தமுடையனவல்லவெனக்கொண்டு இரண்டு நான்கு ஆறு எட்டு இவைகளினின்ற நாட்களைப்பொருத்தமுடையவாக முதற்சீரை யெடுத்துச்சொல்லவேண்டும்.

### கதிப்பொருத்தம்.

அ இ எ க ச ட த ப ஆகியவொன்பதெழுத்தும் தேவர்கதி, ஆ ஈ ஊ ஏ ங ஞ ண ந ம ஆகிய வெண்பதும் மக்கட்கதி, ஒ ஓ ய ர ல ழ ற ஆகிய

---

* மங்கல மொழிக்கண் நஞ்செழுத்துவரின் குற்றமுடையனவல்ல.

வேமெழுத்தும் விலங்கின்கதி, ஊ ஔ வ ள ன ஆகிய ஐந்தெழுத்தும் நரகர்கதி, இவற்றுள் தேவகதியும் மக்கள்கதியும் நல்லனவாம் விலங்கின்கதி நரகர்கதி * தீயனவாம்.

## கணப்பொருத்தம்.

தேமாங்காய் இந்திரகணம், புளிமாங்காய் சந்திரகணம், கருவிளங்கனி நிலக்கணம், கூவிளங்கனி நீர்க்கணம் இவைநல்லனவாம், கருவிளங்காய் அந்தரகணம், கூவிளங்காய் சூரியகணம், தேமாங்கனி வாயுக்கணம், புளிமாங்கனி தீக்கணம் இவையாகாவாம்.

## சிறப்புவிதி.

தானப்பொருத்தமும், நாட்பொருத்தமும், கணப்பொருத்தமும் குற்றம் வரலாகா; தலைவன் இயற்பெயரைக்குறித்த மங்கலச்சொற்குக்குற்றப்பாடுளதாயின் அம்மங்கலச்சொற்கு அடைகொடுத்துக்கூறுதலும், பரியாயச்சொற்கூறுதலும் உரியனவாம், அம்மங்கலச்சொல் முதற்கணன்றி நடுவிலும் இறுதியிலும் நிற்கவும்பெறும்.

மங்கலத்தைக்குறித்துச் சொற்பொருத்தமும், உண்டிப்பொருத்தமும், எழுத்துப்பொருத்தமும், வேறுபடினும் அமையுமெனவும், தானத்தினையும், நாளினையும், கணத்தினையுங்குறித்து மங்கலச்சொல் வேறுபடினும் அமையுமெனவுங் கொள்க.

## நிறம்.

வெண்பா வெண்மை, ஆசிரியப்பா செம்மை, கலிப்பா பொன்மை, வஞ்சிப்பா கருமை.

## குலம்.

வெண்பா பிராமணகுலம், ஆசிரியப்பா சத்திரியகுலம், கலிப்பா வணிககுலம், வஞ்சிப்பா சூத்திரகுலம்.

## நாள்.

வெண்பா கார்த்திகை முதலியவேழும், ஆசிரியப்பா மகமுதலியவேழும், கலிப்பா அனுடமுதலியவாறும், வஞ்சிப்பா அவிட்டமுதலியவேழும்.

## இராசி.

வெண்பா விருச்சிகம்மீனம், ஆசிரியப்பாமேடம் சிங்கம் தனுசு, கலிப்பா, மிதுனம் கும்பம் துலாம், வஞ்சிப்பா இடபம் கன்னி மகரம்.

---

* எடுத்தமங்கலச்சொல்முதலெழுத்தாமாயின் குற்றமுடையனவல்ல.

கிரகம்.

வெண்பா சந்திரன் வியாழம், ஆசிரியப்பா சூரியன் செவ்வாய், கலிப்பா புதன் சனி, வஞ்சிப்பா வெள்ளி இராகு.

நிலம்.

வெண்பா முல்லை, ஆசிரியப்பா குறிஞ்சி, கலிப்பா மருதம், வஞ்சிப்பா நெய்தல்.

---

## மங்கலச்சொற்கள்.

சீர்.

க கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா, வ, வா, வி, வீ என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குச் சீரென்றெடுத்துப்பாடுக.

எழுத்து.

ழ, நூ, யூ என்னும் பெயர்களுக்கு எழுத்து என்றெடுக்க.

பொன்.

கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே, பு, பூ, மெ, மே, மொ, மோ மௌ, என்னும்பெயர்கட்குப்பொன் என்றெடுக்க.

பூ.

கௌ, சை, ம, மா, மி, மீ, மு, மூ, வை, வௌ, என்ற பெயர்கட்குப், பூ வென்றெடுக்க.

திரு-திங்கள்.

கொ, கோ என்றபெயர்கட்குத்திரு அல்லது திங்கள் என்றெடுக்க.

மணி.

கெ, கே, என்றபெயர்கட்கு மணி என்றெடுக்க.

நீர்.

கை, சி, சீ, தீ, தை, நொ, நோ, பை என்னும் பெயர்கட்கு நீர் என்றெடுக்க.

சொல்.

ஔ, சு, சூ, செ, சே, தௌ, நௌ என்னும்பெயர்கட்குச்சொல் என்றெடுக்க.

கங்கை.

அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ, யோ என்னும் பெயர்கட்குக் கங்கையென்றெடுக்க.

வாரணம்.

ஞெ, ஞொ என்றபெயர்கட்கு வாரணம் என்றெடுக்க.

குஞ்சரம்.

இ, ஈ, ஞா, என்னும் பெயர்கட்குக்குஞ்சரம்என்றெடுக்க.

### உலகம்.

ப, பா, என்றபெயர்கட்கு உலகம் என்றெடுக்க.

### பார்.

சு, சா, பெ, பே, பொ, போ, வெ, வே என்னும் பெயர்கட்குப்பாரென்றெடுக்க.

### தேர்.

உ, ஊ, எ, ஏ, ஐ, தை, மை என்னும் பெயர்கட்குத் தேரென்றெடுக்க.

இம்மங்கலச் சொல்லுகட்குப்பரியாயமானசொற்களைக்கொண்டபொழுதினுமிழுக்காது.

### கவிக்குச்சிறப்பு.

பாட்டுடைத் தலைவன் இயற்பெயரையும் ஊர்ப்பெயரையும் உகந்து எதுகையினிலையுளவாகப் பாடுவது சிறப்பு.

### கவிக்குவழு.

பலராலும் உடன்பட்டவழக்கோடு நூற்பயன்பயக்குமின்பத்தினைவிட்டு மெறுதலையாற் புணர்த்தலும்,வடவெழுத்தே மிகப்புணர்த்தலும், பழையோர் கூறிய இலக்கணசொற்களைவிட்டுக் காலத்தாற்கூறும் வழூஉச்சொற்புணர்த்தலும்,வினாவின்றி மயங்கக்கூறுதலும் வழுவாம்.

### வருணம்.

வெண்பா அந்தணருக்கும்,ஆசிரியப்பா அரசருக்கும்,கலிப்பாவணிகருக்கும் வஞ்சிப்பா சூத்திரருக்கும்உரியவாம்.

### திணை.

வெண்பாமுல்லைக்கும், ஆசிரியப்பா குறிஞ்சிக்கும்,கலிப்பாமருதத்திற்கும், வஞ்சிப்பா நெய்தலுக்கும்,மருட்பாபாலைக்குமுரியவாம்.

### நிறம்.

வெண்பாவிற்குவெண்மையும்,ஆசிரியப்பாவிற்குச்செம்மையும், கலிப்பாவிற்குக்கருமையும்,வஞ்சிப்பாவிற்குப் பொன்மையுமுரியவாம்.

## நாள்.

வெண்பாவிற்குக்கார்த்திகைமுதல் ஆயிலியமீறாகவும், ஆசிரியப்பாவிற்கு மகமுதல்விசாகமீறாகவும், கலிப்பாவிற்கு அனுடமுதலவிட்டமீறாகவும், வஞ்சிப்பாவிற்குச் சதயமுதல்பரணியீறாகவுமுரியவாம்.

## இராசி.

வெண்பாவிற்குக்கர்க்கடகம் விருச்சிகம் மீனமும், ஆசிரியப்பாவிற்கு மேடம் சிங்கம் தனுசும், கலிப்பாவிற்கு மிதுனம் துலாம் கும்பமும், வஞ்சிப்பாவிற்கு இடபம் கன்னி மகரமுமுரியவாம்.

## கோள்.

வெண்பாவிற்குச் சந்திரனும் பிரகஸ்பதியும், ஆசிரியப்பாவிற்கு ஆதித்தனும்செவ்வாயும், கலிப்பாவிற்குப்புதனும் சனியும், வஞ்சிப்பாவிற்கு சுக்கிரனும் பாம்புமுரியோர். இன்னும் பாக்களுக்குரியபுஷ்பமும் சந்தனமும்வஸ்திரமும்ஆபரணங்களும் முன்சொன்ன நிறப்பகுதியினாலேகொள்க.

# பிரபந்தங்கள்.

## சாதகக்கவி.

ஓரைநிலையும், திதிநிலையும், யோகநிலையும், நாண்மீனிலையும், வாரநிலையும் கரணநிலையும், கிரகநிலையும் ஆகியவேறுறுப்புகளினிலைகளையும், சோதிடநூலால் நன்குணர்ந்து அவற்றையமைத்து அவற்றால்தலைமகனுக்கு அடைவன கூறல்.

## பிள்ளைக்கவி.

காப்பு செங்கீரை தால் சப்பாணி முத்தம் வாரானை அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர் இவற்றை முறையே ஆசிரிய விருத்தத்தால் பத்துப் பத்தாகக்கூறுவது ஆண்பாற் பிள்ளைக்கவி. இவ்வுறுப்பினில் கடை மூன்றொழித்துக் கழங்கு அம்மானை ஊசல் என்றிவற்றைக் கூட்டிக்கூறுவது பெண்பாற் பிள்ளைக்கவி.

பிறந்த மூன்றாந்திங்கள் முதல் இருபத்தொரு திங்கள் காறும் ஒற்றித்த திங்களில் நிறைமதி பக்கத்திற் பிள்ளைக்கவியை விரும்புக. மூன்றாமாண்டினும் ஐந்தாமாண்டினும் ஏழாமாண்டினும் கொள்ளவும்பெறும். காப்பு ஒன்பது பாட்டானும், பதினொரு பாட்டானும் பாடுக. நிலங்கள் பத்துந்தம்மில் ஒப்பக்கொண்டு பாடுமிடத்து ஒற்றைப்படப்பாடுதல் சிறப்புடைத்து; இரட்டிக்கப் பாடுமிடத்தும் ஓசை பெயர்த்துப்பாடுக. காப்பு முதற்கணெடுத்த

ஆசிரிய விருத்தம் நான்கடிக்கும் எழுத்தொப்பப் பாடுதல் வேண்டுமெனக் கொள்க.

## கலம்பகம்.

வெண்பா கலித்துறை ஒருபோகு முதற்கவி யுறுப்பாக முற்கூறி, புயவகுப்பு மதங்கு அம்மனை காலம் சம்பிரதம் கார் தவம் குறம் மறம் பாண் களிசித்து இரங்கல் கைக்கிளை தூது வண்டு தழை ஊசல் என்னும் பதினெட்டுறுப் பினையும் மடக்கு மருட்பா அகவற்பா கலிப்பா வஞ்சிப்பா ஆசிரியவிருத்தம் கலிவிருத்தம் கலித்தாழிசை வஞ்சிவிருத்தம் வஞ்சித்துறை வெண்டுறையென்னுமிவற்றால் இடையே வெண்பா கலித்துறை விரவி அந்தாதித்தொடையான் முற்றுறக் கூறுவது.

காலத்தான் மருவிய பிச்சியார் கொற்றியார் இடைச்சியார் முதலியவுங் கொள்க. தேவர்க்கு நூறும் அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும் அரசர்க்குத் தொண்ணூறும் அமைச்சருக்கு எழுபதும் வணிகர்க்கு ஐம்பதும் வேளாளருக்கு முப்பதுமாகப்பாடுக. அந்தணரைத் தேவருக் கொப்பாகவும், குறுநில மன்னவரை அரசர்க் கொப்பாகவும் பாடுதலுண்டு.

## பரணி.

போர்முகத்து ஆயிரம் யானையைக்கொன்ற வீரனைத்தலைவனாகக்கொண்டு, கடவுள்வாழ்த்து கடைதிறப்பு பாலைநிலம் காளிகோயில் பேய்களோடுகொளி காளியோடு பேய்கள்கூறத் தான்சொல்லக்கருதிய தலைவன் கீர்த்திவிளங்க அவன்வழியாகப் புறப்பொருள்தோன்ற, வெம்போர்வழுங்கவிரும்பல், இவையெல்லாம் இருசீரடி, முச்சீரடி யொழித்து ஒழிந்த மற்றடியாக ஈரடி பலதாழிசையாற்பாடுவது.

வெண்கலிப்பாவாற்பாடினுமிழுக்காது.

## கோவை.

இருவகையாகிய முதற்பொருளும், பதினான்குவகையாகிய கருப்பொருளும், பத்துவகையாகிய உரிப்பொருளும் பெற்றுக் கைக்கிளைமுதலுற்ற அன்புடைக்காமப்பகுதியவாம் களவொழுக்கமும் கற்பொழுக்கமும் கூறலேயெல்லையாகக்கட்டளைக்கலித்துறை நானூற்றால் திணைமுதலாக துறையீறாகக்கூறப்பட்ட பன்னிரண்டகப் பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப்படுவது. இது அகவல் வெண்பா கலிப்பா வஞ்சிப்பா வண்ணம் இவற்றாலும் வழங்கப்படும்

## வருக்கக்கோவை.

அகரமுதலாகிய வெழுத்துவருக்க மொழிக்குமுதலா மெழுத்துக்கட்டளைக் கலித்துறையாகப்பாடுவது.

### மும்மணிக்கோவை.

ஆசிரியப்பாவும், வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும் முறைமுறை தொகை முப்பதுபெற அடுக்கி அந்தாதி தொடையாற்பாடுவது.

### ஒருபாவொருபஃது.

அகவல், வெண்பா, கலித்துறை இவற்றொன்றினால் அந்தாதித்துப் பத்து பாடுவது.

### இருபாவிருபஃது.

பத்துவெண்பாவும் பத்தகவலும் அந்தாதித்தொடையாக இருபது இணைந்து வருவது.

### அட்டமங்கலம்.

கடவுளைப்பாடி அக்கடவுள் காக்கவென ஆசிரியவிருத்தமெட்டு அந்தாதித்துப்பாடுவது.

### அங்கமாலை.

ஆண்மகனுக்கும் பெண்மகளுக்கும் மிக்கன வெடுத்துக் கூறுமவயவங்களை வெண்பாவாலாயினும், வெளிவிருத்தத்தாலாயினும பாதாதிகேசம்,கேசாதிபாதமுறைபிறழாது தொடர்வுறப்பாடுவது

### அநுராகமாலை

தலைவன் கனவின்கணொருத்தியைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து இனிமையுறப்புணர்ந்ததைத் தன்னுயிர்ப்பாங்கற்குரைத்ததாக நேரிசைக்கலிவெண்பாவாற் கூறுவது.

### இரட்டைமணிமாலை.

முறையானே வெண்பாவுங் கலித்துறையும் இருபது அந்தாதித்தொடையான் வருவது.

### இணைமணிமாலை.

வெண்பாவும் அகவலும்,வெண்பாவும் கலித்துறையுமாக இரண்டிரண்டாக இணைத்து வெண்பாவகவலிணைமணிமாலை, வெண்பாக் கலித்துறை யிணைமணிமாலையென நூறுநூறு அந்தாதியாகப்பாடுவது.

### நவமணிமாலை.

வெண்பா முதலாக வேறுபட்டபாவும் பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதித்துப்பாடுவது.

### மும்மணிமாலை.

வெண்பாவும்,கலித்துறையும், அகவலுமந்தாதியாக முப்பதுபாடுவது.

### நான்மணிமாலை.

வெண்பாவும், கலித்துறையும், அகவலும், விருத்தமும் அந்தாதியாய் நாற்பது வருவது.

### நாமமாலை.

அகவலடியும் கலியடியும் வந்துமயங்கியவஞ்சிப்பாவால் ஆண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

### பலசந்தமாலை.

பத்துப்பத்துச் செய்யுள்வெவ்வேறு சந்தமாக நூறு செய்யுட் கூறுவது.

### பன்மணிமாலை.

கலம்பகத்திற்குக்குறித்த ஒருபோகும், அம்மானையும் ஊசலுமின்றி ஏனையுறுப்புக்களெல்லாம் வரப்பாடுவது.

### மணிமாலை.

எந்தப்பொருண்மேலும், வெண்பாவிருபதும், கலித்துறை நாற்பதும்விரவப்பாடுவது.

### புகழ்ச்சிமாலை.

அகவலடியும், கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் பெண்களின் சிறப்பைக்கூறுவது.

### பெருமகிழ்ச்சிமாலை.

பெண்கள் அழகும், குணமும், ஆக்கமும், சிறப்பு முதலியன கூறுவது.

### வருக்கமாலை.

மொழிக்கு முதலாகும் வருக்கவெழுத்தினுக்கு ஒவ்வொரு செய்யுட் கூறுவது.

### மெய்க்கீர்த்திமாலை.

சொற்சீரடியென்னும் கட்டுரைச் செய்யுளால் குலமுறையிற்செய்த கீர்த்தியைக்கூறுவது.

### காப்புமாலை.

தெய்வங்காத்தலாக மூன்று செய்யுளாலும் ஐந்து செய்யுளாலும் பாடுவது.

### வேனின்மாலை.

வேனிலையும் முதிர்வேனிலையும் சிறப்பித்துப்பாடுவது.

### வசந்தமாலை.

தென்றலைவருணித்துப்பாடுவது.

### தாரகைமாலை.

அருந்ததிக்கற்பின் மகளிர்க்குள்ள இயற்கைக் குணங்களை வகுப்பிற்கூறுவது.

### உற்பவமாலை.

திருமால் பிறப்புப் பத்தையு ஆசிரிய விருத்தத்தால் கூறுவது.

### தானைமாலை.

அகவலோசையிற்பிறழாத ஆசிரியப்பாவால் முன்னொடுத்துச்செலலுங் கொடிப்படையைக் கூறுவது.

### தண்டகமாலை.

வெண்பாவினால் முன்னூறு செய்யுட்கூறுவது.

### வெட்சிமாலை.

சுத்தவீரன் பகைவரூரிற்சென்று பசுநிரைகவர்ந்துவருவதை மிகுத்துக்கூறுவது.

### வெற்றிக்கரந்தைமஞ்சரி.

பகைவர் கொண்டதந்நிரை மீட்போர கரந்தைப்பூமாலைச்சூடிப் போய் மீட்டதைக்கூறுவது.

### போர்க்கெழுவஞ்சி.

பகைவர்மேல் போர்க்குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலை சூடப்புறப்படும் படையெழுச்சிச்சிறப்பை யாசிரியப்பாவாற்கூறுவது.

### வரலாற்றுவஞ்சி.

குலமுறை பிறப்புமுதலிய மேம்பாட்டின் பலசிறப்பையுங்கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது.

### செருக்களவஞ்சி.

போர்க்களத்தில் இறந்தகுதிரை யுடலையும் யானையுடலையும் மனிதருடலையும் நாயும் பேயும் பிசாசமும் காகமும் கழுகும் தின்றுகளித்துப்பாடிய சிறப்பைப்பாடுவது.

### காஞ்சிமாலை.

பகைவரூர்ப்புறத்துக் காஞ்சிப்பூமாலை சூடியூன்றலைக் கூறுவது.

### நொச்சிமாலை.

புறத்தூன்றிய பகைவர் கோடலின்றி நொச்சிப் பூமாலைசூடித் தன்மதில் காக்குந்திறங்கூறுவது.

### உழிஞைமாலை.

பகைவர் ஊர்ப்புறஞ்சூழ உழிஞைப்பூமாலைசூடிப்படைகளப்பத்தைக் கூறுவது.

### தும்பைமாலை

பகைவரொடு தும்பைப்பூமாலை சூடிப்பொருவதைக் கூறுவது.

### வாகைமாலை.

பகைவனைவென்று புகழ்படைத்து வாகைப்பூமாலை சூடுவதையாசிரியப் பாவாற் கூறுவது

### வாதோரணமஞ்சரி.

யானையைவயப்படுத்தி அடக்கினவருக்கும் எதிர்த்தயானையை வெட்டியடக்கினவருக்கும் பற்றிப்பிடித்துச் சேர்த்தவருக்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவால் தொடுத்துப்பாடுவது.

### எண்செய்யுள்.

பாட்டுடைத்தலைவன் ஊரையும் பெயரையும் பத்துமுதல் ஆயிரமளவும் பாடி எண்ணாற்பெறுவது.

### தொகைநிலைச்செய்யுள்.

நெடிலடிச் செய்யுளால் தொகுத்தது நெடுந்தொகை, குறளடிச் செய்யுளால் தொகுத்தது குறுந்தொகை, கலிப்பாவால் தொகுத்தது கலித்தொகை போல்வன.

### ஒலியலந்தாதி.

பதினாறு கலையோரடியாகவைத்து, இங்ஙனம் நாலடிக்கறுபத்து நாலுகலைவகுத்து, பலசந்தமாக வண்ணமும், கலைவைப்பும், தவறாமலந்தாதித்துமுப்பது செய்யுட்பாடுவது. சிறுபான்மை யெட்டுக்கலையானும் வரும், வெண்பா அகவல், கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பத்துப்பத்தாக அந்தாதித்துப் பாடுவதுமுண்டு.

### பதிற்றந்தாதி.

பத்துவெண்பா பத்துக்கலித்துறை பொருட்டன்மைதோன்ற அந்தாதித்துப்பாடுவது.

## நூற்றந்தாதி.

நூறுவெண்பாவிலேனும் நூறுகலித்துறையிலேனும் அந்தாதித்துக் கூறுவது.

## உலா.

இளமைப்பருவ முற்றதலைவனைக் குலத்தானுங்குடிப்பிறப்பானும் மங்கலங்களானும் பரம்பரையானும்இன்னானென்பது தோன்றக்கூடிஅணிகலன்களால் அலங்கரித்துக்கொண்டு முதன்மையெய்தியமாநா நெருங்கிய அழகிய வீதியிடத்து அன்னோன்பவனிவரப்பேதை முதலியஎழ்பருவமாதர்கண்டுதொழ உலாவந்ததாக நேரிசைக் கலிவெண்பாவாற் கூறுவது

ஐந்துமுதலேழளவும்பேதை, எட்டுமுதற்பதினொன்றளவும் பெதும்பை, பன்னிரண்டுமுதற்பதின்மூன்றளவுமங்கை, பதினான்குமுதல்பத்தொன்பதளவு மடந்தை, இருபதுமுதலிருபத்தைந் தளவுமரிவை, இருபத்தாறுமுதல்முப்பத்தொன்றளவுந்தெரிவை, முப்பத்திரண்டுமுதல் நாற்பதளவும் பேரிளம்பெண்.

## உலாமடல்

கனவிலொரு பெண்ணைக்கண்டு கலவியின்பநுகர்ந்தோன விழித்தபின் அவள் பொருட்டு மடலூர்வேனென்பதைக் கலிவெண்பாவால் முற்றுவிப்பது,

## வளமடல்.

அறம், பொருள், இன்பமாகிய பயனைநீத்திரத்து, மங்கையர்காமவின்பத்தைப் பயனெனக்கொண்டு பாட்டுடைத்தலைமகனை இயற்பெயருக்குத்தக்கதை எதுகையாகநாட்டிக்கூறி அவ்வெதுகைப்பட தனிச்சொல்லின்றிஇன்னிசைக் கலிவெண்பாவால் தலைமகனிரந்து குறைபெறாது மடலேறுவதாய்ச்சீரடியெதுகையாக வரப்பாடுவது.

## அற்றுப்படை

அகவற்பாவால விறலி, பாணா, கூத்தா, பொருநா, இந்நால்வரிலொருவர் பரிசுக்குப்போவாரைப் பரிசுபெற்றுவருவோர் ஆற்றிடைக்கண்டு தலைவன்கீர்த்தியும், கொடையும், கொற்றமுங்கூறுவது.

## கண்படைநிலை,

அரசரும் அரசரைப்போல்வாரும் அவைக்கண்நெடிது வைகியவழி மருத்துவரும் மந்திரிமாரும் முதலியோருக்கும் கண்டுயில் கோடலைக்கருதிக்கூறுவது.

## பெயரின்னிசை

பாட்டுடைத்தலைவன் பெயரைச்சார இன்னிசைவெண்பாவால்தொண்ணூறேனும் எழுபதேனும்ஐம்பதேனும் பாடுவது.

### ஊரின்னிசை.

பாட்டுடைத்தலைவ னூரைச்சார இன்னிசைவெண்பாவால் தொண்ணூறேனும்எழுபதேனும் ஐம்பதேனும்பாடுவது.

### பெயர்நேரிசை.

பாட்டுடைத்தலைவன் பெயரைச்சார நேரிசைவெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும ஐம்பதேனும்பாடுவது.

### ஊர்நேரிசை.

பாட்டுடைத்தலைவன் ஊரைச்சார நேரிசைவெண்பாவால் தொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும்பாடுவது.

### ஊர்வெண்பா.

வெண்பாவால் ஊரைச்சிறப்பித்துப் பத்துச்செய்யுள்பாடுவது.

### விளக்குநிலை.

வேலும் வேற்றலையும் விலங்காதோங்கியவாறுபோலக் கோலொடுவிளக்குமொன்றுபட்டோங்குமா றோங்குவதாகக் கூறுவது.

### புறநிலை.

நீவணங்குந் தெய்வம் நின்னைப்பாதுகாப்ப நின்வழிவழிமிகுவதாகவெனக் கூறுவது.

### கடைநிலை.

சான்றோர் தூரத்தில் வருதலால் பிறந்த வருத்தந் தீர வாயில்காக்கின்றவனுக்கு என்வரவைத் தலைவற்கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

### கையறுநிலை.

கணவனோடு மனைவி கழிந்துழி, அவர்கண்பட்ட வழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தி, தாமிறந்துபடாதொழிந்தவாயத்தாரும், பரிசில்பெறும் விறலியரும் தனிப்படருழந்துசெயலறு நிலையைக்கூறுவது.

### தசாங்கப்பத்து.

நேரிசை வெண்பாவால் அரசன்படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுட்கூறுவது.

### தசாங்கத்தியல்.

அரசன் தசாங்கத்தை யாசிரிய விருத்தத்தால் பத்துச் செய்யுட்கூறுவது

### அரசன்விருத்தம்.

பத்துக்கலித்துறையும், முப்பதுவிருத்தமும் கலித்தாழிசையுமாக மலை கடல், நாடுவருணனையும், நிலவருணனையும், வாண்மங்கலமும், தோண் மங்கலமும் பாடிமுடிப்பது.

### நயனப்பத்து.

கண்களைப் பத்துச்செய்யுளால் கூறுவது.

### பயோதரப்பத்து.

முலையைப் பத்துச்செய்யுளால் கூறுவது.

### பாதாதிகேசம்.

கலிவெண்பாவால் அடிமுதல் முடியளவும் கூறுவது.

### கேசாதிபாதம்.

கலிவெண்பாவால் முடிமுதலடியளவும் கூறுவது.

### அலங்காரபஞ்சகம்.

வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்த விருத்தம் இவ் வகையே மாறி மாறி நூறு செய்யுளந்தாதித்துப்பாடுவது.

### கைக்கிளை.

ஒருதலைக்காமத்தை ஐந்து விருத்தத்தால்கூறுவது. முப்பத்திரண்டு செய் யுளால் கூறுதலுமாம்.

### மங்கலவள்ளை.

உயர்குலத்திற்பிறந்த மடவாரை வெண்பா வொன்பதாலும், வகுப்பொன்ப தாலும் பாடுவது.

### தூது.

ஆண்பாலும் பெண்பாலும் அவரவர்காதலை பாணன்முதலிய உயர்திணை யோடும், கிளிமுதலிய வஃறிணையோடும் சொல்லித்தூதுபோய் வாவெனக்கலி வெண்பாவாற்கூறுவது.

### * நாற்பது.

இடமும், பொருளும், காலமும், ஆகியவிவற்றுளொன்றினை நாற்பதுவெ ண்பாவாற்கூறுவது.

### குழமகன்.

கலிவெண்பாவால் பெண்கள்தங்கையிற்கண்ட இளமைத்தன்மையுடை ய குழமகனைப்புகழ்ந்து கூறுவது.

### தாண்டகம்.

இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்தவெழுத்தடியினவாய் எழுத்தும் கு ருவும் இலகுவுமொத்துவருவன அளவியற்றாண்டகமெனவும், எழுத்தொவ்வாதும்

---

* காலம்பற்றிவருவது கார்நாற்பது இடம்பற்றிவருவது களவழிநாற்பது பொருள் பற்றிவருவது இன்னாநாற்பது இனியாநாற்பது.

எழுத்தலகொவ்வாதும்வந்தன அளவழித்தாண்டகமெனவும்ஒருபொருளைக்குறித்துப் பத்துச்செய்யுளாகக்கூறுவது.

## பதிகம்.

ஒரு பொருளைக் குறித்துப் பத்துச்செய்யுளாகக் கூறுவது.

## சதகம்.

அகப்பொருளொன்றன் மேலாதல், புறப்பொருளொன்றன் மேலாதல் கற்பித்து நூறு செய்யுட்கூறுவது.

## செவியறிவுறூஉ.

பொங்குதலின்றிப் புரையோர் நாப்பணிக்கூறல கடனென அவையடக்கியற்பொருளும் மருட்பாவாற்பாடுவது

## வாயுறைவாழ்த்து.

வேம்புங்கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக்கூடாவாயினும், பின்னர்ப் பெரிதும பயன்றருமென, மெய்ப்பொருளுற மருட்பாவாற்கூறுவது.

## புறநிலைவாழ்த்து.

வழிபடுதெய்வ நின்னைப் புறங்காப்பக் குற்றமில்லாத செல்வத்தோடு ஒருகாலைக்கொருகால் சிறந்து பொலிவாயெனறு மருட்பாவா லறைவது.

## பவனிக்காதல்.

உலாக்காட்சியாலெய்திய காமமிக்கால், அவை பிறரொடு முனைத்து வருந்துவது.

## ஊசல்.

ஆசிரிய விருத்தத்தானுதல், கலித்தாழிசையானுதல் சுற்றத்தோடும் பொலிவதாக ஆடிருசல், ஆடாமோவூசல் என்றிறக்கூறுவது.

## எழுக்கூற்றிருக்கை.

கோதிலேழுறை யாக்கிக்குறுமக்கண் முன்னின்றும்,புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமை ஒன்றுமுதலேழிறுதியாக முறையானே பாடுவது.

## கடிகைவெண்பா.

தேவரிடத்தும் அரசரிடத்தும் நிகழுங்காரியம் கடிகையளவிற் றோன்றி நடப்பதாக, முப்பத்திரண்டு நேரிசைவெண்பாவாற் கூறுவது.

## சின்னப்பூ.

நேரிசைவெண்பாவால் அரசனது சின்னமாகிய தசாங்கத்தைச் சிறப்பித்து, நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுந் தொகைபடக் கூறுவது.

## விருத்தவிலக்கணம்.

வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், குடை இவ்வொன்பதையும் பத்துப்பத்து அகவல் விருத்தத்தால் ஒன்பது வகையுறப்பாடுவது.

## முதுகாஞ்சி.

இளமைகழிந்து அறிவின்மிக்கோர், இளமைகழியாத அறிவின் மாக்கட்குக் கூறுவது.

## இயன்மொழிவாழ்த்து.

இக்குடியிற் பிறந்தோர்க்கெல்லாம் இக்குறையியல் பென்றும்,அவற்றை நீயுமஇயல்பாகவுடையை யென்றும்,இன்னோர பலநீயும் இயல்பாகவீயென்றும்,உயர்ந்தோரவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

## ஒலியலந்தாதி.

பதினாறுகலையோரடியாகவைத்து,இங்ஙனம்நாலடிக்கறுபத்துநான்குகலை வகுத்துப், பலசந்தமாகவண்ணமும், கலைவைப்புந் தவறாமலந்தாதித்துமுப்பதுசெய்யுட்பாடுவது, சிறுபான்மையெட்டுக்கலையானும்வரும், வெண்பா, கலித்துறை ஆகியஇம்மூன்றையும்பத்துப்பத்தாக அந்தாதித்துப்பாடுவதுமுண்டு.

## குறத்திப்பாட்டு.

தலைவன்பவனிவரவு, மகளிர்காமுறல, மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக்கண்டு மயங்கல், திங்கள் தென்றன்முதலியவுவாலம்பனம் பாங்கியுற்ற தென்னெனவினவல், தலைவிபாங்கியோடுற்றதுகூறல், பாங்கிதலைவனைப் பழித்துக்கூறல், தலைவி தலைவனைப்புகழ்ந்து கூறல் தலைவிபாங்கியைத்தூதுவேண்டல் தலைவிபாங்கியோடு தலைவனடையாளங்கூறல், குறத்திவரவு, தலைவிகுறத்தியை மலைவளமுதலிய வினவல், குறத்திமலைவளநாட்டுவளமுதலிய கூறல், தலைவன்றலவளம் கிளைவளமுதலியகூறல், குறிசொல்லிவந்தமைகூறல், தலைவிகுறிவினவல், குறத்திதெய்வம்பரவல குறிதேர்ந்து நல்வரவுகூறல், தலைவிபரிசிலுதவிவிடுத்தல், குறவன்வரவு, புள்வரவுகூறல், கண்ணிகுத்தல, புட்படுத்தல் குறத்தியைககாமுற்றுததேடல, குறவனபாஙகனொடுகுறததியடையாளங்கூறல், குறவன்குறத்தியைக கண்ணுறல, குறவனணிமுதலிய கண்டையுற்று வினவலு மாண்டாண்டு குறத்திவிடை கூறலுமாகக்கூறல், பெரும்பான்மையுமிவ்வகை யுறுப்புக்களால, அகவல், வெண்பா, தரவுகொச்சகம், கலிததுறை, கழிநெடில்விருத்தம் கலிவிருத்தம் இச்செய்யுளிடைக் கிடைக்கூறிச் சிந்துமுதலிய நாடகத்தமிழாற்பாடுவது.

## உழத்திப்பாட்டு.

கடவுள் வணக்கமுறையே மூத்தபள்ளி இளைய, பள்ளி,குடும்பன் வரவோடவன் பெருமைகூறல்,முறையே யவர்வரலாறு நாட்டுவளன் குயிற்கூக்கேட்

டல், மழைவேண்டிக் கடவுட்பரவல், மழைக்குறியோர்தல், ஆற்றின்வரவு, அதன்சிறப்புக்காண்ட லிவற்றின் இடையிடையகப்பொருட்டுறையுங்கூறிடபண்ணைத்தலைவன் வரவுபள்ளிகளிருவர் முறையீடு இளையாளையவராறுப்பல், பள்ளன்வெளிப்படல் பண்ணைச்செயல்வினவல், அவனதுகூறல், ஆயமைவருவித்தல், அவர்வரல், அவர்பெருமைகூறல்,மூத்தபள்ளிமுறையீடு, குடும்பன் இடையிலிருந்தான் போலவரல், அவனைத்தொழுவிலை மாட்டல் அவன்புலம்பல், மூத்தபள்ளி யடிசிற்கொடுவரல், அவனவளோடுகூறல் அவனவளை மன்னித்தல் கேட்க வேண்டல், அவண்மறுத்தல் அவன்குளுறல் அவனவளை மீட்கவேண்டி பண்ணைத் தலைவனைப்பரவல், விதைமுதலிய வளங்கூறல், உழவருழல், காளைவெருளல் அதுபள்ளனைப்பாய்தல், பள்ளிகள்புலம்பல் அவனெழுந்துவித்தல அதைப் பண்ணைத்தலைவற்கறிவித்தல், நாறுநடல், விளைந்தபிர்செப்பஞ்செயல் நெல்லளத்தல், மூத்தப்பள்ளிமுறையீடுபள்ளிகளுளொருவாக் கொருவரோசலென விவவுறுப்புக்களுறப் பாட்டுடைத்தலைவன பெருமையாங்காங்கு தோன்றச்சிந்தும் விருத்தமுமய விரவிவர விவறருறப்பாடுவது.

## பெருமங்கலம்.

நாடோறுந் தான்மேற்கொள்கின்ற சிறைசெய்தன்முதலிய செற்றங்களைக்கைவிட்டுச் சிறைவிடுகன்முதலிய சிறந்தொழிலகள் பிறந்ததறகுக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக்கூறுவது.

## பெருங்காப்பியம்.

தெய்வணக்கமுஞ் செயப்படுபொருளு மிவற்றிற்கியையவாழ்த்து முன்னுளதாயறம தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளுமிவற்றிற் கியையவாழ்த்துமுன்னுளதாயறம்பொருளினபம்வீடென்னுநாற்பொருளும் பயக்குநெறியுளதாய நிகரிலாத்தலைவனையுடைத்தாய மலையுங்கடலு நாடுநகரும்பருவமுமிருசுடர்த்தோற்றமு மென்றிவற்றின் வளங்கூறுதலுமணமு முடிகவித்தலும்பொழிலவிளையாடடு நீர்விளையாட்டு உண்டாட்டுமகப்பேறும் புலவியுங்கலவியுமென்றிவற்றைப் புகழ்தலும் மந்திரமுந்தூதுஞ் செலவும்போரும் வென்றியுமென்றிவற்றைத் தொடர்துகூறலுமாகியவிவைமுறையேதொடர்வுறச் சருக்கமிலம்பகம் பரிச்சேதமென்றும் பகுப் புடைத்தாய் வீரமுதலியசுவையுமவற்றை விளக்குங் கருத்துவிளங்கக்கற்றோராணியற்றப்படுவதாம் நாற்பய னொழிந்தேனையவுறுப்புகளுட்சில குறைந்தியலினுங்குற்றமின்று.

## சிறுகாப்பியம்.

அறம் பொருளின்பம்வீடெனு நான்கனுளொன்றும் பலவுங்குறைந்தேனையவுறுப்புகண் மேற்கூறியவாறியல்வது.

## வேறுபெயர்கள்.

பொருளாலும், இடத்தாலும், தொழிலாலும், உறுப்பாலும், அளவாலும் செய்தோன் பெயராலும் செய்வித்தோன் பெயராலும் பெயர்பெறும். பொருள்பற்றிவந்தது ஆசாரக்கோவை, இடம்பற்றிவந்தது மதுரைக்காஞ்சி, காலம் பற்றிவந்தது வேனிலவிருத்தம், தொழில்பற்றிவந்தது யானைத்தொழில், உறுப்புப்பற்றிவந்தது நயனப்பத்து எல்லைப்பற்றிவந்தது கேசாதிபாதம், செய்தோன் பெயர்பற்றிவந்தது அகத்தியம், செய்வித்தோன் பெயரால்வந்தது பாண்டிக்கோவை முதலியனபிறவுமன்ன.

## அரங்கேற்றுங்காலம்.

அகர ஆகாரமும், இகர ஈகரா ஐகாரமும், உகர ஊகார ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும் முறையே உதயாதி அவவாறுநாழிகையுதிக்கும். இவற்றுள் முதன்மூன்ற நாழிகையும் உத்தமம், பினமூன்று நாழிகையுமாகாது, இவ்வைந்து கூறெழுத்துக்களை முதலிலுடைய பாக்களுக்குச் சொன்னகாலத்தில் முற்கூற்றிலரங்கேற்றுக.

செய்யுளிலக்கண முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| கக | கஅ. | இவன் | இவண். |
| ருசு | உரு | வீனமையின் | வினமையின். |
| ருஅ | ச | ஓர்பு | ஓர்பூ. |
| ,, | உம் | செய்ரி | செய்ஙி. |
| சஎ | கரு | வருமாது | வருமாறு. |